# அரசு ஊழியர்

**2022 ஜனவரி மலர்:43 இதழ்:01**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**
**அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு**
**ஆசிரியர் : ஆ.செல்வம்**

**ஆசிரியர் குழு:**
**மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி**

**இதழ் வடிவமைப்பு:**
**ஆர்.காளத்தி** *9677003178*

*ஆண்டுச் சந்தா : ரூ.100*
*தனி இதழ் : ரூ.10*

**முகவரி:** *பழைய எண். 48*
*புதிய எண் 46, தேரடித் தெரு*
*திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.*
e-mail : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:** *சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை-600002*


## சூடா ஒரு கோப்பை சூப்

**இசங்கள்!**
துண்டறிக்கைகள்
கண்டன ஆர்ப்பாட்டங்கள்
டீ க்கும் ரொட்டிக்குமிடையில்
இசங்கள்...

பெருமழை கொண்ட
ஓர் அர்த்த யிரவில்
தலைக்காக தரப்பட்ட
நெகிழியில்
நீர் சொட்டுகிறது

மேக் கூரையை
அண்ணாந்து
பார்த்துக்கொண்டிருந்தார்
தோழர்!

*- ஜீவன் பென்னி*

தலைவர் மடல்

# போராடிப் பெறுகின்ற பேராண்மை அதுவே எப்போதும் நம் பெருங்கடமை!

''எல்லா சாலைகளும் ரோம் நகரை நோக்கியே'' என்றொரு பழமொழி ஆங்கிலத்தில் சொல்வார்கள் அதைப்போல டிசம்பர் 2021 18, 19 தேதிகளில் தமிழகத்தின் எல்லா சாலைகளும் ராம் லட்சுமி பாரடைஸை நோக்கியே நகர்ந்து கொண்டிருந்தன என்றால் அது மிகையல்ல. மாநாட்டுக்கு வந்தவர்களுடன், வராதவர்களும் அங்கே என்ன நடக்கிறது என்பதை அறிய ஆவலுடன் தங்கள் இதயத்தை மாநாட்டு அரங்குடன் இணைத்துக் கொண்டு காத்திருந்தார்கள்.

அரசு ஊழியர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்கள் மட்டுமல்ல, மீடியாக்கள் எனப்படும் ஊடகவியலார் முதற்கொண்டு உலகியலார் அனைவரும் உற்று நோக்கிக் கொண்டிருந்த தருணங்கள் அவை. இந்த மாநாடு இத்தனை உசரத்துக்கு எழும்பி நிற்கக் காரணம் தமிழக முதல்வர் அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்கிறார் என்கிற செய்தி திக்கெட்டும் தீயாகப் பரவியிருந்ததுதான்.

மாநாட்டுப் அரங்கிற்கு முதல்வர் வரும் வரையில் பலபேர் பலமுறை கேட்டுவிட்டார்கள் அரசு ஊழியர்கள் மாநாட்டில் முதல்வர் கலந்து கொள்வது உண்மைதானா உறுதிதானா என்று. முதல்வர் மாநாட்டு மேடையில் ஏறி நின்று மைக்கை பிடிக்கும் வரை அவர்களுக்கு அந்தச் சந்தேகம் இருந்து கொண்டிருந்தது. இன்னும் சிலபேருக்கு இந்த செய்தி ஆச்சர்யமாக இருந்தது ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து அரசு ஊழியர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் எதையும் நிறைவேற்றாத தமிழக முதல்வர் எந்த ஹோதாவில் மாநாட்டில் கலந்து கொள்கிறார் என்று.

இன்னொரு கூட்டம் இருந்தது. திட்டமிட்டு மாநாட்டு நிகழ்வுகளை சதிசெய்து சீர்குலைக்க ஒன்றுசேர்ந்த கூட்டம். அவர்கள் ஆரம்பத்திலிருந்தே மாநாட்டுக்கு அரசு ஊழியர்கள் வரமாட்டார்கள் என்பதில் தொடங்கி, முதல்வர் மாநாட்டு வருகிறார் என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதை அப்படியெல்லாம் எந்த நிகழ்ச்சிக்கும் முதல்வர் நேரம் ஒதுக்கவில்லை என்றெல்லாம் தாறுமாறாக வதந்திகளை பரப்பிக்கொண்டிருந்தார்கள்.

அதே கும்பல்தான் முதல்வர் பேசி முடித்த பிறகு "அரசு ஊழியர்கள் ஏமாற்றம். மாநாட்டு மேடையில் எந்த திட்டத்தையும் முதல்வர் அறிவிக்காததால் அதிர்ச்சி'' என்றெல்லாம் வலைதளங்களில் எதிர்வினை ஆற்றத் தொடங்கியது.

முதல்வர் நம்முடைய மாநாட்டில் கலந்து கொள்கிறார் என்பதைத் தாண்டி நமக்கெல்லாம் ஒரு எதிர்பார்ப்பு இருந்ததென்னவோ உண்மைதான். ஆட்சிப்பொறுப்பேற்று ஆறுமாத காலமாகியும் அவர் நமக்கு கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றிட வில்லை என்பதும் உண்மைதான். அவருடைய அமைச்சர் சகாக்கள் சிலபேர் நம்மைப் பற்றியும், நமது போராட்டங்கள் பற்றியும் தரம்குறைத்துப் பேசியதும் உண்மைதான். ஆனால் அவற்றையெல்லாம் மீறி அவர் நமது மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு தெரிவிக்கிறார் என்றால் உண்மையில் அவருக்கு நம் மீது அக்கறையும், அன்பும் கொண்டிருக்கிறார் என்றுதான் அர்த்தம்.

மாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வொரு அரசு ஊழியரும் நட்சத்திரத்தின் சிறப்புக்கு சற்றும் குறைந்தவர்கள் அல்ல என்பதை முதல்வருக்கும் இந்த உலகிற்கும் உணர்த்தினர். பொது மாநாட்டில் மிகுந்த கட்டுப்பாட்டுடனும், கடமை உணர்வுடனும் மாநாட்டிற்கு வந்திருப்பது நாட்டின் முதல்வர் மட்டுமல்ல நமது சிறப்பு விருந்தினர் என்ற உணர்வுடன் பொறுப்புடன் அனைவரும் நடந்து கொண்ட விதம் முதல்வர் உள்ளிட்ட அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்துவிட்டது. அரசு ஊழியர் இயக்கம் கட்டுக்கோப்பானது என்பதை இன்னொரு முறை தெள்ளத்தெளிவாக நிரூபித்து காட்டிய மாநாடாக இம்மாநாடு அமைந்தது. முதல்வர் சொன்னது போல தாங்க வேண்டிய இடத்தில் தாங்கியும், தாக்க வேண்டிய இடத்தில் தாக்கியும் தங்கள் உரிமைகளை பெறக்கூடிய அரசியல் ஞானம் பெற்றவர்கள் அரசு ஊழியர்கள் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறோம் நாம்.

பொறுமை என்பது எவ்வளவு கசப்பான தாவரம் என்பதை நாம் உணர்ந்தே உள்ளோம். கடந்த பத்தாண்டு கால பொறுமை நம்மை மிகுந்த விழிப்புணர்வு கொள்ள வைத்திருக்கிறது. கடந்த பத்தாண்டு காலத்தில் அதிமுக முதல்வர்கள் நம்மை சந்திப்பதையே தவிர்த்து விட்டவர்கள். எங்கே நேரில் சந்தித்தால் நம்முடைய நியாயாமான கேள்விகளுக்கு விடை சொல்ல முடியாது என்பதை அவர்கள் அறிந்தே இருந்தார்கள். அதனால்தான் அவர்கள் நம்மை ஒருமுறைகூட சந்திக்க அனுமதிக்கவில்லை. உண்மையில் அரசு ஊழியர்களுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தால் முன்னாள் முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி நம்மை சந்தித்து இருப்பார். அவர் நம்மை மதிக்கத் தவறியதால் நாம் அதிமுக அரசை தூக்கி வீசியெறிவதில் முக்கியப் பங்காற்றினோம்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு தேவையானவற்றை செய்ய வேண்டும் என்ற உணர்வு உள்ளதையும் மற்றவர்களைப் போல் மழுங்கடிக்காமல் நிதிநிலை சரியானதும் கண்டிப்பாக செய்கிறேன் என்று மீண்டும் மீண்டும் உறுதியளித்து வருவதையும் நாம் புறந்தள்ளிவிட முடியாது. பத்து ஆண்டுகள் காத்திருந்த நமக்கு இன்னும் சில மாதங்கள் காத்திருப்பது இதுவரை சந்தித்து வந்த சிரமங்களை ஒப்பு நோக்குகையில் அது சகித்துக் கொள்ளக்கூடிய எதிர்பார்த்த சிரமம்தான். பொறுமை என்பது ஒரு கசப்பான தாவரம். ஆனால் அதன்கனி இனிப்பானது என்பதை நம்முடைய பொறுமை சொல்லும். நாம் பல்லைக்கடித்துக் கொண்டு பொறுத்துக் கொண்டிருக்கும் பத்துவருட வலி, பத்துமாத வலியைவிட பெரியது என்பதை நாம் முதல்வருக்கு புரிய வைத்துள்ளோம். நாம் நம்முடைய உரிமைகளுக்கான திசையில் பொறுமையோடும், உறுதியோடும், போராட்டக் குணத்தோடும் பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்கிற உண்மையை முதல்வரும், கூட இருப்பவர்களும் கவனித்து வருகின்றார்கள்.

இந்த மாநாட்டில் முதல்வர் அறிவிப்புகள் எதையும் அறிவிக்கவில்லை என்றாலும் சில விஷயங்களை உறுதிப்படுத்தியிருக்கிறார். அதில் முக்கியமானது நம்முடைய உரிமைகள் எல்லாம் உயிர்ப்போடு இருக்கின்றன என்பதாகும். மாநாட்டில் கலந்து கொண்ட முதல்வர் "பார்க்கிறேன்" என்றோ "இல்லை" என்றோ பேச விழையாமல் தான் கொடுத்த உறுதிமொழியும் நாம் கொடுத்த கோரிக்கைகளும் நிச்சயம் படிப்படியாக நிறைவேறும் என்பதை இன்னும் உறுதிபட கூறியிருக்கிறார். அவர் கொடுத்த உறுதி நம்மை உற்சாகப் படுத்தியுள்ளது.

நம்முடைய நடவடிக்கைகளையும் உறுதிமிக்க போராட்ட குணங்களையும் முதல்வரும் அரசாங்கமும் எவ்வளவு உன்னிப்பாக கவனிக்கிறது என்பதற்கு

உதாரணம்தான் முதல்வர் தன்னுடைய உரையில் நாம் எழுதிய கட்டுரையை மேற்கோள் காட்டி "ஆட்சியாளர்களை திரும்பிப் பார்க்க வைக்க வேண்டிய அவசியம் உங்களுக்கு இருக்காது. ஏனென்றால் நான் உங்களுடனேயே இருக்கிறேன்." என்று பேசியிருப்பது.

பத்து வருட உரிமைப் போராட்டத்தின் உச்சியில் நாம் இருக்கிறோம். இந்த நேரத்தில் நம்முடைய ஆசான் தோழர் எம்.ஆர்.ஏ. சொன்னது தான் நினைவுக்கு வருகிறது. "போராட்டங்கள் எந்த அளவுக்கு உறுதியோடு இருக்கின்றனவோ அந்த அளவுக்கு உரிமைகள் உங்களுடன் இருக்கும்."

முதல்வர் அவர்கள் சொன்னது போலவே சிறப்பான துவக்கம் தொடங்கியிருக்கிறது. நமது நிர்வாகிகள், முதல்வரை நேரில் சந்தித்து நமது 14ஆம் மாநில மாநாட்டில் அவர் கலந்து கொண்டதற்கு நன்றி தெரிவிப்பதற்காக, சென்ற மாத இறுதியில் அவரை சந்தித்த போது அவர் நம்மை மலர்ந்த முகத்துடன் வரவேற்று நம்பிக்கை அளிக்கும் விதமாகப் பேசினார். நாம் அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு வந்த உடனேயே அகவிலைப்படி 14 சதவீத உயர்வை அரசு ஊழியர்கள் அனைவரும் வழங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார். அத்துடன் சி மற்றும் டி பிரிவு ஊழியர்களுக்கு பொங்கல் போனசும் அறிவித்து அரசு ஊழியர்கள் அனைவருக்கும் இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார். முதல்வரின் இந்த அறிவிப்பு, அரசு ஊழியர்கள் அனைவருக்கும் நம்பிக்கையையும், உற்சாகத்தையும் இந்த புது ஆண்டில் ஏற்படுத்தியுள்ளது. நமக்கும் நம்முடைய இந்த கோரிக்கைகள் அனைத்தும் படிப்படியான நிறைவேறும் என்ற நம்பிக்கை மேலும் மேலும் உறுதிபட்டுள்ளது. நம்மை அழைத்துப்பேசி, நம்பிக்கையூட்டி, உற்சாகப்படுத்தி, நம்முடைய கோரிக்கைகளை பரிசீலித்து படிப்படியாக நிறைவேற்றுவதாக உறுதி அளித்து, அதன் தொடக்கமாக அகவிலைப்படி உயர்வு அறிவிப்பு, சி மற்றும் டி பிரிவு ஊழியர்களுக்கு பொங்கல் போனஸ் அறிவித்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நாம் அனைவரும் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

தாண்ட வேண்டிய தடைகள் ஏதும் இல்லாவிட்டால் மனிதனின் அற்புதமான அனுபவம் மகிழ்ச்சியின் ஒரு பகுதியை இழக்கும். கடக்க வேண்டிய இருட்டுப் பள்ளத்தாக்குகள் இல்லாவிட்டால் மலை உச்சியை அடையும் போது பாதி சந்தோஷம்கூட இருக்காது என்கிற ஹெலன் கெல்லரின் வார்த்தைகள் நாம் நம் உரிமைகளைப் போராடிப் பெறுவதே பேராண்மை என்பதை உணர்த்தும் வரிகள். நாம் நம் போராட்டங்களின் மீது வைக்கின்ற நம்பிக்கைதான் நம் எதிர்காலத்தை தீர்மானிக்கும்.

இன்று நாம் நம்முடைய உரிமைகளுக்காக மேற்கொள்ளும் போராட்டங்களும் அதில் கிடைக்கும் வெற்றிகளும் இன்றிலிருந்து இருபது வருடங்கள் கழித்து, நாம் எவ்வளவு செல்வாக்குடன் இருப்போம், எவ்வளவு பெரிய வீட்டில் வசிப்போம், நம்முடைய வங்கிக் கணக்கில் எவ்வளவு பணம் இருக்கும், எவ்வளவு அழகான ஆடைகள் அணிவோம் என்பதற்கான ஏற்பாடுகளுக்கானவை அல்ல. இருபது வருடங்கள் கழித்து அரசு ஊழியர்களாக இருப்பவர்கள் அனைவரும் தங்களுக்கான உரிமைகளுடன் கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்கான முன்னேற்பாடுகளை செய்து கொடுத்த பெருங்கடமையை செய்து முடித்தவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதற்கான உந்துதல்தான் இது. அது தொடரட்டும்.

*தோழர்களே தோழியரே !*
*நான் உங்களுக்குச் சொல்வேன்*
*வாழ்க்கை நமக்கு பளிங்கு*
*படிக்கட்டுக்களில் ஏறுவதாக இல்லை,*
*அதில் ஆணிகள் இருக்கின்றன*
*ஆங்காங்கே சிதைந்திருக்கின்றன*
*சில இடங்களில் உடைந்திருக்கின்றன.*
*ஆனால் எப்போதும் வெறுங்கால்களில்*
*ஏறிக்கொண்டே இருந்திருக்கிறோம்.*

*இருட்டுக்குள் சென்றிருக்கிறோம்,*
*திருப்பங்களில் திரும்பியிருக்கிறோம்,*
*ஆனால் எப்போதும்*
*கீழிறங்கிவிட நினைத்ததில்லை!*
*கடினமாக இருக்கிறதென்று*
*கைவிட்டுஜீடவில்லை!*
*நாம் இன்னும்*
*ஏறிக் கொண்டேயிருக்கிறோம்!*

●

# 14 ஆம் மாநில மாநாடு
# தமிழகம் போற்றும் சென்னை மாநாடு

அன்பிற்குரிய தோழர்களே! காலம் ஓடிக்கொண்டேயிருக்கிறது ஆதியும், அந்தமும் வரையறுக்க முடியாத காலவெளியில் நம் பயணம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது ஆனாலும், சென்னையில் நாம் சந்தித்த அந்த கணங்கள் நாளது வரை தமிழக முழுவதும் உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் நெஞ்சைவிட்டு அகலாதிருக்கிறது அது குறித்து சில நாட்கள் நமக்குள் அலைபேசியில் பேசிவிட்டுச் சென்று விட முடியாது அந்த கணங்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை... அவை மிக மிக அற்புதமான மறக்க முடியாத, மகத்துவமிக்க கணங்கள் என்று ஒரு வரியில் எழுதி வைத்து விட்டும் போய் விட முடியாது அவை வரலாறால் தொகுக்கப்பட்டு பதிவு செய்திட வேண்டும்.

இங்கே பதிவுகள் மேற்கொள்ளப்படுவது அந்தச் சிறப்பான கணங்களை உருவாக்கிய காரணகர்த்தாக்களை புகழ்ந்துரைத்து பெருமைப்படுத்துவது என்ற ஒரே நோக்கத்திற்காக மட்டுமல்ல. வரலாற்றை... நிகழ்வுகளை பதிவு செய்வதற்கு அடிப்படையாக ஒரு நோக்கம் இருக்கிறது. தொழிற்சங்க இயக்கங்களில் தொழிலாளர் தியாகங்கள் மறைக்கப்பட்டு விடக்கூடாது என்பதோடு... கடந்த கால நிகழ்வுகள்... நிகழ்கால மற்றும் எதிர்கால விளைவுகளை... நினைவுகளை அது குறித்த சிந்தனைகளை உருவாக்கும் காரணிகளாக இருக்கின்றன, என்பதால் ஒவ்வொரு நிகழ்வையும் வெகு இயற்கையாக அழுத்தமாக பதிவு செய்ய வேண்டியுள்ளது.

2021 டிசம்பர் 18 சென்னை கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டும், பெருந்தொற்றை எதிர் கொண்டும், இருந்த அந்த தருணத்தில், எத்தனைத் தடைகள் எத்தகையதாய் வந்தாலும் நான் என் கடமையைச் செய்தே தீருவேன் என்று சுறுசுறுப்பாக மாநாட்டு பணிகளை மேற்கொண்டிருந்த வரவேற்பு குழுத் தோழர்கள், மாநில நிர்வாகிகளை வரவேற்க...

வரவேற்புகுழுச் செயலாளர் தோழர். சா. டானியல் ஜெயசிங், வரவேற்புக்குழு நிதிக் காப்பாளர் தோழர். அந்தோணிசாமி, தோழர். வினோத்குமார், சுந்தரம்மாள், வரவேற்புக்குழுத் தோழர்கள் அனைவரும் இரண்டு மாதங்களுக்கும் மேலாக உற்சாகமாய் பணியாற்றி வந்த வரவேற்ப்பு குழு தோழர்கள், மாநில நிர்வாகிகள், வந்த பின் மேலும் கூடுதலான உற்சாகத்தோடு பம்பரமாய் சுற்றி சுழன்று தங்கள் பணிகளில் ஈடுப்பட்டார்கள்.

14ஆம் மாநில மாநாட்டிற்கான வரவேற்புக்குழு 2021 செப்டம்பர் 26 அன்று அமைக்கப்பட்டது வரவேற்புக்குழு அமைக்கப்பட்ட அந்த நொடியிலேயே அதன் பணிகள், தொடங்கி விட்டது என்று சொன்னால் அது மிகையல்ல. அதற்கிடையில் கடுமையான மழை வெள்ளம் சென்னை கடுமையான பாதிப்பு ஒரு வார காலம் மாநாட்டு நிதி சேகரிப்பு பணி சற்று சுணக்கம் ஏற்ப்பட்டது அதை எல்லாம் வரவேற்புக்குழு தோழர்கள் எதிர் கொண்டு மாநாட்டுப் பணிகளில் ஈடுபட்டார்கள். வரவேற்புக்குழுத் தலைவர் பொறுப்பை ஏற்று இந்த மாநாடு சிறக்க உதவிட வேண்டும் என இந்திய தொழிற் சங்க மையத்தின், மாநில தலைவரும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினருமான, தோழர் அ.சவுந்தரராசன் அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது அவரும் அதனை இன்முகத்தோடு ஏற்றுக்கொண்டு ஏற்புரை நிகழ்த்தி முடித்தபோது அக்கூட்டத்தில் பங்கேற்ற தோழர்கள் பலர், வரவேற்புக்குழுத் தலைவர், தோழர். அ.சவுந்தரராசன் அவர்களிடம் தங்கள் நிதி பங்கினை வழங்கினார்கள் என்பது பெருமையுடன் பாராட்ட வேண்டிய ஒன்றாகும். எனவே அப்போதே அந்தப்பணிகள் துவங்கியது என்பதே உண்மையாகும். அன்று தொடங்கிய அந்த நிதி வசூல் உற்சாகமான தொடக்கமாக அமைந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக முக்கியமானது பொருளாதாரம் என்பது நம்



எல்லோரும் அறிந்ததே. அது நிதியாய் பொருளாய், வந்த வண்ணம் இருந்தது, இந்த மாநாட்டுக்காக இதுவரை இல்லாத அளவில் 2 முறை நிதியளிப்பு கூட்டம் நடைபெற்றது, அதில் பல்வேறு துறைவாரிச்சங்கம், ஆசிரியர், அமைப்புகள், அரசு ஊழியர்களுக்கு அப்பாற்பட்ட பலரும் மனமுவந்து உதவினார்கள் பெயர் சொன்னால் பட்டியல் நீண்டு கொண்டு போகும். நம் முன்னணித்தோழர்கள் மக்கள் பணியை நேர்மையாய், உளப்பூர்வமாக ஆற்றுபவர்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தது என்பதே. மாநாட்டு பணிகள் ஒவ்வொன்றினையும் ஆழமாக விவாதித்து சரியாக திட்டமிட்டு வரவேற்புக்குழு மிகச் சிறப்பாக செய்திருந்தது அந்த வகையில் எல்லாவற்றையும் இங்கே குறிப்பிட முடியவில்லை என்றாலும் சில வற்றை பதிவு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. திட்டமிட்டபடி குறித்த நேரத்தில் மாநாட்டு அரங்கத்திற்கு முன்பு உள்ள நெடுஞ்சாலையில் 1/2 கிலோ மீட்டர் தள்ளி, நமது சங்க கொடியும், AISGEF கொடியும், தொண்டர்கள், மிக பிரமாண்டமாக கையில் ஏந்தி, காவல் துறை பேண்ட் வாத்தியத்துடன், பெண் தோழர்களும், ஆண் தோழர்களும் சீருடையுடன் தொண்டர் அணி வகுப்போடு பேரணியை முன்னாள் மாநிலத்துணைத்தலைவர். பி.வி. சந்திரசேகர், கொடி அசைத்து துவக்கி வைக்க, பேரணி மாநாட்டு அரங்கத்திற்குள் சென்றது. மாநாட்டு அரங்கத்தினுள், மிக எழுச்சியுடன் முழக்கங்களுடன், வாண வேடிக்கையுடன் நமது அமைப்பின், சங்க கொடியை மாநிலத் தலைவர் தோழர். மு. அன்பரசு அவர்களும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனக் கொடியை, பொதுச் செயலாளர். ஆ.செல்வம் அவர்களும் ஏற்றி வைத்தனர்.

மாநாட்டு அரங்கில், சிறப்பு நிகழ்வாக மாற்று ஊடக மையத்தின், தப்பாட்டம், நாகை அரசு ஊழியர் கலைக்குழு வழங்கும், எதார்த்த நாடகங்கள், மற்றும் நமது தோழர்களின் பாடல்கள், உள்ளிட்ட அனைவரின் பங்களிப்பும் மிகுந்த பாராட்டுக்குரியது. மேலும், போதுமான வசதியுடன், கூடிய தங்கும் இடங்கள், பெண் தோழர்களுக்கு தங்குவதற்கு தனி ஏற்பாடுகள், வாகன வசதியுடன் செய்திருந்தது. இன் முகத்துடனான உபசரிப்புடன் கூடிய அறுசுவை, சைவ, அசைவ உணவு ஏற்பாடுகள், தொண்டர்கள் சீருடையுடன், அனைத்து பணிகளிலும் ஈடுபட்டது குறிப்பாக பெண் தோழர்கள் பங்கு மிக பாராட்டுகுரியதாக இருந்தது. மாநாட்டுக்கு வந்தவர்களுக்கு, மருத்துவக்குழு மாநாட்டு அரங்கத்திற்கு இருந்தது, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வழங்கப்படும் தாய்வீட்டுச் சீதனமாய் பெண் பிரதிநிதிகள் அனைவருக்கும் சேலை வழங்கியது. மாநாட்டு அரங்கிற்கும், திடல் அமைந்த இடத்திற்கும், மறைந்த முன்னாள் பொதுச்செயலாளர் தோழர். K.R. சங்கரன் அவர்கள் பெயரும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கௌரவத்தலைவர். ஆர்.ஜி. கார்னிக் அவர்களின் பெயரும் மிகப்பொருத்தமாக சூட்டப்பட்டிருந்தது. பொது மாநாட்டிற்கு 5000 மேற்பட்ட நாற்காலிகள் போட்டு மிகச் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தது, அதில் தோழர்கள், நிகழ்ச்சியை பார்ப்பதற்கு மிக பிரமண்டமாக LED T.V. வைத்தது எனப் பல்வேறு அம்சங்களில் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. அதேபோல் தோழர்கள், என். வெங்கடேசன், சி.எஸ். கிரிஸ்டோபர், சி. பரமேஸ்வரி, மாநிலத்துணைத்தலைவர்கள், மற்றும் மாநில செயலாளர் கொண்ட பதிவுக்குழு தோழர். கோ. பழனியம்மாள், மாநில துணைத்தலைவர். தே.வாசுகி, மாநிலச்செயலாளர், உ. சண்முகம், மாநிலச்செயலாளர், தீர்மானக்குழுவாகவும், தோழர். இரா. மங்களபாண்டியன், ஆ. பெரியசாமி, மாநில துணைத்தலைவர்கள், ப. அந்துவன் சேரல் (நாகை), இரா. இரமேஷ் (தஞ்சாவூர் ஆகியோரைக் கொண்ட தகுதிகாண் குழு நடவடிக்கை பதிவுக்குழு, அனைத்து குழுக்களின் உதவியோடு 14 ஆம் மாநில மாநாட்டை மாநிலத்தலைவர் தோழர். மு. அன்பரசு அவர்கள் கம்பீரமாய் தலைமையேற்று நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதே போல், மாநிலமாநாட்டு அலுவலகப்பணிகளில், உற்ற துணையாக அலுவலக மேலாளர் தோழர் வெங்கடேசன், தட்டச்சுப்பணிகளை

உடனுக்குடன் செய்து கொடுத்த மாநில நிர்வாகிகள், தோழர். சீனிவாசன், வாசுகி ஆகியோர் பணி பாராட்டுக்குரியதாகும். இம்மாநாடு வெற்றி மாநாடாக அமைய உழைத்த முன்னாள், மாநில நிர்வாகிகளும் அதே போல் தொலைபேசி மூலம், உற்சாகப்படுத்தி நிதி வசூல் உள்ளிட்ட மாநாட்டு பணிகளுக்கு ஊக்க மூட்டிய, மாநில நிர்வாகிகள், முன்னாள் மாநி நிர்வாகிகளும், சென்னையில் மாநாடு நடத்துவது என்று முடிவெடுத்த நாள் தொடங்கி தொடர்ந்து பல நாட்கள், வரவேற்புக்குழுத் தோழர்களுடன் இணைந்து வழி காட்டிய, மாநிலத்தலைவர் தோழர். மு. அன்பரசு மற்றும் முன்னாள் மாநில நிர்வாகிகள், தோழர்கள் K.M. தியாகராஜன், வெற்றிராஜன், பி.எஸ். அப்பர், சீனிவாசன், அவர்களும் உற்ற சகோதரர்களாய் நின்ற தஞ்சை தோழர். கோதண்டபாணி ஆகிய தோழர்களுக்கும் பாராட்டுக்கள். எழுச்சியோடு நடைபெற்ற இம்மாநாட்டின் தலைவர்கள் ஆற்றிய உரை மிகக் குறிப்பிடத்தக்கதாகும். இம்மாநாட்டை வரவேற்புக்குழுத் தலைவர் தோழர். அ. சவுந்தரராசன் வரவேற்புரை ஆற்றிய போது பேசியது, உழைப்பாளர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் எந்தவொரு போராடும் சங்கமும், தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கான போராட்டத்தையே முதலில் முன்னெடுக்க வேண்டியிருக்கிறது அந்த போராட்டங்கள் கடுமையானதாகவும், நீடித்ததாகவும், பழிவாங்கல்களை தாங்கி முன்னேறுவதாகவுமே இருந்துள்ளன, ஊழியர்களின் படைகலனாய் இருக்க வேண்டிய சங்கம் நிர்வாகத்தின் கால் செருப்பாக மாறிப்போனால் ஊழியர்களின் உரிமைகள் உதாசினப்படுத்தப்படும்.

தமிழ் நாடு அரசு ஊழியர்கள் அப்படிப்பட்ட அவலத்தில் உழன்று கொண்டு இருந்த போது படைக்கலனாய் சங்க நாதம் முழங்கி ஆர்பரித்து களத்தில் இறங்கிய அமைப்புதான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், அரசு ஊழியர்களின் குரலாய், மனசாட்சியாய், ஆன்மாவாய், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஊழியர் மனங்களில் சிம்மாசனமிட்டது. அரசையும், ஆமாம் சாமிகளையும் அடுத்தடுத்த போராட்டங்கள் மூலம் அசரவைத்த பேரியக்கம் இது. அரசு ஊழியர்கள் வேலை நிறுத்த போராட்டங்கள், வரலாறு படைத்த அமைப்பு, அரசு ஊழியர் சங்கம் என்று வரவேற்புரை நிகழ்த்தினார், இம்மாநில மாநாட்டினை துவக்கி வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் தோழர். சு.வெங்கடேசன் அவர்கள், ஒரு நீண்ட போராட்ட வரலாறு கொண்ட இயக்கம் அரசு ஊழியர் சங்க இயக்கம், இந்திய தொழிற்சங்க வரலாறு திரும்பி பார்க்க வைத்த வரலாறு என்பதில் மாற்று கருத்து இல்லை. இந்தியாவிலேயே தொழிற்சங்கத்தினுடைய குரலை அரசியல் குரலோடு இணைத்து முதலில் ஒரு முழுகத்தை முன் வைத்தவர்கள், போராட்டத்தில் களம் கண்டவர்கள் தமிழர்கள் தான் என்று தொடங்கி, சுதந்திர போராட்ட காலத்தில் அடிமை இந்தியாவில் இருந்ததை விட இப்போது நிலைமை மோசமாக இருக்கின்றது. அடிமை இந்தியாவின், காலனி இந்தியாவின் 10% விழுக்காடு மக்களிடம் 50% விழுக்காடு செல்வமும் வருமானமும் இருந்தது. 2009க்கும் 2019க்கும் இடையே இப்போது 10% விழுக்காடு மக்களிடம் 57% விழுக்காடு செல்வமும், வருமானமும் இருக்கின்றது.

இது காலனி ஆட்சிக்காலத்தில் இருந்ததைவிட மிக மோசமான நிலை இது சமூகத்தில் ஒரு பெரும் கொந்தளிப்பை உருவாக்கும் அந்த கொந்தளிப்பில் ஆளும் வர்க்கம் தனது கேடயமாக பயன்படுத்தப்போவது அரசு ஊழியர்களைத்தான் என்பதை மறந்து விடாதீர்கள் எனவே ஒட்டுமொத்த அரசியல் பார்வையோடு இணைந்து உங்கள் பயணத்தை தொடர வேண்டும். வலிமையாக இயக்கத்தை கட்டமைக்க வேண்டும் நாங்கள் உங்கள் கேடயமல்ல மூலதனத்திற்கும் உழைப்ப சுரண்டலுக்கும் எதிராக போராடுகின்ற மக்களின் தோழர்கள் நாங்கள் என்பதை அரசியலாக நிரூபிக்கின்ற இயக்கமாக, வடிவமாக அரசு ஊழியர் சங்கம் செயல்பட வேண்டும் என்று, சிறப்பான உரை நிகழ்த்தினார். மாநாட்டு பொது அமர்வில் முதல் அறைகூவல் தீர்மானமாக ஒன்றிய அரசின் மக்கள் விரோத ஊழியர் விரோத கொள்கைகளுக்கு எதிராக அகில இந்திய அளவில் பிப்ரவரி-23, 24 ஆகிய தேதிகளில், நடைபெறும் இரண்டு நாள் வேலை நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பங்கேற்பது என மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இம்மாநாட்டின் ஒரு பகுதியாக நடை பெற்ற கருத்தரங்கில், தென்

மண்டல காப்பீட்டு ஊழியர் கூட்டமைப்பு, துணைத்தலைவர் தோழர். சு. சுவாமிநாதன் "மறுக்கப்படும், உரிமைகள் பறிக்கப்படும் சலுகைகள், எதிர் கொள்ளும் சாவல்கள்" என்ற தலைப்பிலும், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின், மாநில பொருளாளர் முனைவர் தீபா, "பேசுவது பெண் உரிமை, பேணுவதோ பெண் அடிமை" என்ற தலைப்பிலும் உரையாற்றினார்கள், மேற்படி தலைப்பிலான கருத்துரைகள் மிகவும் கருத்தாழமிக்கதாக இருந்தது. 2021 டிசம்பர் 19 மாநாட்டின் நிறைவாக நடைபெற்ற பொது மாநாடு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வரலாற்றில் முத்திரை பதிப்பதாக அமைந்தது என்றால் மிகையானதல்ல, பல்வேறு தடைகள், கொரோனா தொற்று இருந்த போதும் இவையனைத்தையும் மீறி இயக்கம் ஒன்றே எங்கள் உயிர் மூச்சு என பத்தயிரத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் தமிழகம் முழுவதும் இருந்து வந்து பங்கேற்றார்கள் என்பதை இங்கே பெருமையோடு பதிவு செய்கிறோம்.

இத்தகைய பொது மாநாட்டிற்கு கட்டியம் கூறுகின்ற வகையில், கடந்த 10 ஆண்டுகள் பலவேறு போராட்டங்களை நடத்தியும் தொழிற்சங்க ஜனநாயகத்தை கேலி கூத்தாகி கொண்டிருந்த கடந்த அதிமுக அரசை அப்புறப்படுத்தி, நம்முடைய கோரிக்கை தேர்தல் கால, வாக்குறுதிகளாக சேர்த்தது மட்டும் அல்ல கடந்த கால போராட்டங்களிலும், ஆயத்த மாநாடுகளில் நேரடியாகவும், கானொலி மூலம், பங்கு ஏற்று நமது கோரிக்கைகளை கழக அரசு வந்தால் நிறைவேற்றப்படும் என்று நம்பிக்கையிட்ட, தமிழக மக்களின் விடி வெள்ளியாக திகழ்ந்த, திகழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நமது சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டின் பொது மாநாட்டிற்கு வருகை புரிந்தது, மிக பெரிய நம்பிக்கை , உற்சாகத்தையும், அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்தியது. பொது மாநாட்டிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று உரையாற்ற வரவேற்புக்குழு செயலாளர். சா. டானியல் ஜெயசிங் வரவேற்புக்குபின், துவக்கவுரையாக தோழர். நெ. இல. சீதரன், மாநிலத்தலைவர், தமிழ்நாடு அரசு அனைத்துறை ஓய்வூதியர் சங்கம் பொது மாநாட்டினை துவக்கி வைத்து உரையாற்றினார். தோழமைசங்க வாழ்த்துரையாக தோழர். ச. மயில் பொதுச்செயலாளர், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டாணி தோழர் கு. குமரேசன், மாநிலத்தலைவர், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம், தோழர். ச.பாரி, பொதுச்செயலாளர், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் தோழர். ரெ. காயாம்பூ மாநிலத்தலைவர், தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு தோழர். தே. முருகன் மாநில துணைத்தலைவர், தமிழ்நாடு வணிவரிப் பணியாளர் சங்கம் தோழர். டி. செந்தில்குமார், மாநிலத்தலைவர் தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கம், தோழர். இரா. நூர்ஜஹான் பொதுச்செயலாளர், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம், தோழர் அம்சராஜ் சாலைப்பணியாளர் சங்கம், தோழமையுரை நிகழ்த்தினார்கள், வாழ்த்துரையாக ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் தோழர்கள் அ.மாயவன், இரா.தாஸ், கு. வெங்கடேசன், ஆர்.பெருமாள்சாமி, ஜெ. காந்திராஜ், கு.தியாகராஜன் பேசினார்கள் இரண்டு நாள் மாநாட்டின் முக்கிய அம்சங்களையும், கடந்தகால போராட்டங்களின் முக்கிய அம்சங்களையும் நினைவு கூர்ந்து மாநில தலைவர் தோழர் மு. அன்பரசு உரைக்கு பின்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விளக்கவுரை பொதுச்செயலாளர் தோழர். ஆ. செல்வம் எடுத்துரைத்தார், மேற்படி தீர்மானம் அப்போதே வெற்றி பெற்றதற்கு அடையாளமாக பல்லாயிரவரின் கரவொலி விண்ணதிர ஒலித்தது.

அதை தொடர்ந்து சிறப்புரையாக தோழர். அ. சவுந்தரராசன், Ex MLA மாநிலத்தலைவர் சிஐடியு அவர்கள் உரை இன்றைய காலத்திற்கு தேவையான சிறப்பான உரையாக இருந்தது என்பதோடு வந்திருந்த அனைவருக்கும் உணர்வூட்டுவதாக இருந்தது, மாநாட்டின் முத்தாய்பாக சிறப்பு விருந்தினராகவும், மாநாட்டு பேருரை ஆற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேச வருகை தந்தபோது, மிகுந்த கரவொலிக்கு மத்தியில் முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள், எங்களோடு எப்பொழுதும் கட்சிகள் கூட்டணி வைக்கிறதோ இல்லையோ ஆனால் நீங்கள் எப்பொழுதும் கூட்டணி வைத்துள்ளீர்கள், அதே உணர்வோடு இந்த மாநாட்டில் பங்கேற்கிறேன், அரசு

ஊழியர்கள் இல்லை என்றால் அரசாங்கம் இல்லை, அரசு ஊழியர் தான் அரசாங்கத்தை நடத்துகிறார்கள், அதை சொல்லத்தான் இங்கு வந்துள்ளேன், எப்பொழுதும், அரசு ஊழியர்கள் நலனில் அக்கறை உள்ளது கழக அரசு, இப்பொழுது மட்டும் அல்ல எப்பொழுதும், அரசு ஊழியர்கள் கோரிக்கைகள், அனைத்தையும் நிறைவேற்றித்தருகிறேன் என்னை திரும்பி பார்க்க வேண்டிய அவசியமில்லை, ஏனென்றால் நான் உங்களில் ஒருவன் என்ற நம்பிக்கை விதையை விதைத்தார். அதுதோடு மட்டும் அல்ல தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசில் தெளிவு பெற்ற சங்கம் எனவே நிதி நிலை மிக மோசமாக இருப்பதாலும் அரசு ஊழியர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் உள்ளது, ஆனால் அவை அனைத்தும் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்று முதல்வரின் வெளிப்படையான பேச்சு யதார்த்தமானதாக இருந்தது, 14 ஆண்டுகளுக்கு பிறகு தமிழக முதல்வர் நமது மாநாட்டில் பங்கு ஏற்று சிறப்புரை ஆற்றியது மீண்டும் ஒருமுறை முத்திரை பதித்த மாநாடாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

பொது மாநாட்டில் இரா. ந.நம்பிராஜன் மாநிலச்செயலாளர் நன்றி கூறினார். இவ்வாறாக 14 ஆம் மாநில மாநாடு எழுச்சியோடும், ஆவேசத்தோடும் எல்லாவித சிறப்பம்சங்களோடும் நடந்து முடிந்தது என்று மட்டும் பதிவு செய்து விட்டு முடித்துக்கொள்வது சரியாகுமா? இல்லை இந்த மாநாடு எழுச்சியோடு நடத்திட பலரும் தங்கள் பங்களிப்பை செய்துள்ளார்கள், இருப்பினும் பல எல்லாவற்றுக்கும் மேலாய்... பெய்த மழை காய்ந்த வெயில், பனி, என எல்லாவற்றிலும், இரவு பகல் பாராது ஏறக்குறைய இரண்டரை மாதங்களும் தன்னை கரைத்துக் கொண்டு நம்மோடு.... நம்மில் ஒருவராய், முன்னின்று வரவேற்புக்குழுத் தலைவர் பொறுப்புக்கு ஒரு அர்த்தத்தை இலக்கணத்தை உருவாக்கிக் கொண்டு பணியாற்றிய வரவேற்ப்புக்குழு தலைவர் தோழர். அ. சவுந்தரராசன் அவகளும் அவரது தலைமையினான தொண்டர்படையும், அர்ப்பணிப்பு உணர்வுடன், கண் துஞ்சாது ஆற்றிய பணிகளுமே இம்மாநாட்டை வெற்றி மாநாடாக்கியது என்பதை ஆழமாக பதிவு செய்வதே நிறைவாக இருக்கும் என்ற வகையில் அதைப் பெருமையுடன் பதிவு செய்கிறோம். இத்தகைய வெற்றி மாநாடு காட்டும் திசைவழி ஸ்தாபனத்தை வழி நடத்திடவும் வலுப்படுத்தும் வகையில் மாநாட்டில் எதிர் கால கடமை நிறைவேற்றிடவும் முதலாளித்துவ அரசியலுக்கு முடிவு கட்ட 2022 பிப்ரவரி 23, 24 அகில இந்திய வேலை நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், பங்கேற்று ஒன்றிய அரசின் மக்கள் விரோத ஊழியர் விரோத நாசகரமான தேச விரோத கொள்கைகளுக்கு எதிராக செயல்படும் ஒன்றிய அரசை எதிர்த்து இந்திய அளவில் நடைபெறும் மாபெரும் இரண்டு நாள் வேலை நிறுத்தத்தில் அரசு ஊழியர்களாகிய நாமும் கலந்து கொண்டு புதிய பென்சன் திட்டத்தை திரும்பபெற்று பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வரவேண்டும், தொகுப்பூதியம் ஒப்பந்தம், தினக்கூலி, அவுட்சோர்சிங் முறையை கைவிட்டு சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதை கைவிட வேண்டும். 21 மாத நிலுவை ஊதியம், சரண்டர், GPF வட்டி குறைப்பு அரசுத்துறையில் உள்ள காலி பணியிடங்களை நிரப்பிட வேண்டும், விலைவாசி உயர்வு கட்டுப்படுத்திட வேண்டும் உள்ளிட்ட அரசு ஊழியர்கள் கோரிக்கைகளும், அகில இந்திய கோரிக்கைகளும் வெற்றி பெற முன் நிற்க வேண்டும்.

போராட்டம் ஒரு பூகம்பம் போல தன்னை தலைமறைவாக வளர்த்துக் கொண்டிருக்கிறது. ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், என சில பொறுமல்கள், மூலம் போராட்டம், தன் இருப்பை உணர்த்திய போதெல்லாம், சில சலுகைத் தடவல்காளால் அதை தனித்து விடலாம், என ஆள்வோர், தப்புக்கணக்கு போடுகிறார்கள் எனவே போராட்டங்கள், பூகம்பமாய் வெடித்து கிளம்ப வேண்டும் என அழுத்தமாய் சுட்டிக்காட்டியிருக்கிறது 14 ஆம் மாநில மாநாடு. ஆம் தோழர்களே, ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராய் ஒளிரும் தீப்பந்தங்களாய் ஓங்கி உரக்க முழங்கி 2022 பிப்ரவரி 23, 24ல் ஆவேசமான வேலை நிறுத்தத்திற்கு தயாராவோம். ஒன்றுபடுவோம், போராடுவோம், முன்னேறுவோம். ●

மாநாட்டு வரவேற்புரை

# அரசு ஊழியர் போராட்டங்கள் வரலாறு படைத்தவை

- அ.சவுந்தரராசன்

அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டங்கள் வரலாறு படைத்தவை என சிஐடியு மாநிலத்தலைவரும் அரசு ஊழியர் சங்க மாநாட்டு மாநில மாநாட்டு வரவேற்புக்குழு தலைவருமான அ.சவுந்தரராசன் கூறினார். சென்னையில் சனிக்கிழமை (டிச,18) தொடங்கிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநாட்டு மாநில மாநாட்டில் வரவேற்புரையாற்றிய அவர், உழைப்பாளர்கள் மற்றும் ஊழியர்களின் எந்தவொரு போராடும் சங்கமும் தன்னை நிலை நிறுத்திக்கொள்வதற்கான போராட்டத்தையே முதலில் முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. அந்தப் போராட்டங்கள் கடுமையானதாகவும், நீடித்ததாகவும், பழி வாங்கல்களை தாங்கி முன்னேறுவதாகவுமே இருந்துள்ளன. ஊழியர்களின் படைக்கலனாய் இருக்க வேண்டிய சங்கம், நிர்வாகத்தின்



கால் செருப்பாக மாறிப்போனால் ஊழியர்களின் உரிமைகள் உதாசீனப் படுத்தப்படும்ஆமாம் சாமிகளை அசைய வைத்த இயக்கம்தமிழக அரசு ஊழியர்கள் அப்படிப்பட்ட அவலத்தில் உழன்று கொண்டிருந்த போது எண்பதுகளின் தொடக்கத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர்களின் படைக்கலனாய் சங்க நாதம் முழங்கி ஆர்ப்பரித்து களத்தில் இறங்கிய அமைப்புதான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். இது உண்மைக்கும் உரிமைக்கும் போராடும் சங்கமாக பிறந்ததால் எதிர் நீச்சல் போட வேண்டியிருந்தது. அரசு ஊழியர்களின் குரலாய், மனசாட்சியாய், ஆன்மாவாய் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஊழியர் மனங்களில் சிம்மாசனமிட்டது. அரசையும். ஆமாம் சாமிகளையும் அடுத்தடுத்த போராட்டங்கள் மூலம் அசைய வைத்த பேரியக்கம் இது. குறிப்பாக 1978, 1988, 2002, 2003,2016,2017 வேலை நிறுத்தப் போராட்டங்கள் வரலாறு படைத்தவை. போராட்டங்களுக்காக இந்தியாவில் பெரும் எண்ணிக்கையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட வெங்கொடுமையை எதிர் கொண்ட இயக்கம் இது. அத்தக்கூலி முறை யில் பணியமர்த்தப்பட்ட மதிப்பூதியம், தொகுப்பூதியம் பெறும் பிரிவினர்களை அரசு ஊழியர்களாக்குவது, காலிப் பணியிடங்களை நிரப்புவது போன்றவற்றிற்காக குறிப்பாக எடுத்த போராட்ட முன்னெடுப்புகள் தொழிலாளி வர்க்க உணர்வின் வெளிப்பாடுகள்.

அரசை பணிய வைத்த சங்கம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எண்ணற்ற தனிப் போராட்டங்களை சுயேச்சையாக நடத்தியிருக்கிறது. இந்தப் போராட்டங்கள் மூலம் சங்கத்திற்கு வெளியில் இருக்கும் ஊழியர்களையும் உணர்கூட்டியது. தனி இயக்கத்தில் அஞ்சாமலும், சளைக்காமலும் ஈடுபட்ட அரசு ஊழியர் சங்கம் "ஜாக்டோ-ஜியோ" என்ற கூட்டு இயக்கத்தின் மூலம் தனி முத்திரையையும் பதித்தது. அரசு ஊழியர்கள், ஆசிரியர் பெருமக்களும் சேர்ந்து நடத்திய போராட்ட ங்கள் அரசைப் பணிய வைத்தது என்பது அகில இந்தியாவிற்கும் பாடமாக அமைந்தது. அரசு ஊழியர் சங்கம் தனிக் கொட்டகை போட்டு தன்னை தனிமைப்படுத்திக் கொள்ளாமல் உழைப்பாளி வர்க்கம் என்ற பொது பிரவா கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு மத்திய மாநில அரசுகளின் கொள்கைகளையும், அதன் பின்னால் இருக்கும் முதலாளித்துவ அரசியலையும் எதிர்த்துப் போராடுகிற அமைப்பு என்பது பெருமைக்குரியது. தொழிற்சங்கங்கள் இணைந்து நடத்தும் அனைத்து அகில இந்திய வேலை நிறுத்தங்களிளும் பங்கெடுத்த பாரம்பரியத்தைக் கொண்ட அமைப்பு இது.

பொதுத்துறையை பாதுகாக்கஒன்றிய அரசு பணமயமாக்கல் திட்டத்தின் மூலம் அரசின் சொத்துக்களை குத்தகைக்கு விடுவது என்ற பேரால் முதலாளிகளுக்கு தாரைவார்க்கத் துடிக்கிறது. விமானம், ரயில்வே, சாலைகள், துறைமுகம், பாதுகாப்பு, மின்சாரம், சுரங்கங்கள் போன்ற தயார் நிலையில் இருக்கும் எல்லா சொத்துக்களையும் முதலாளிகளின் வேட்டைக் காடாக்குகிறது மத்திய அரசு. இந்தக் கொள்கைகளை எதிர்த்து குரலெழுப்பிப் போராடும் அமைப்பு இது. இது போன்ற அநீதிகளுக்கு எதிராக நடக்கும் எல்லாப் போராட்டங்களிலும் பங்கெடுப்ப தோடு, பல ஆதரவு இயக்கங்களை நடத்து கிற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பாராட்டுக்குரிய பேரியக்கம். இந்த இயக்கத்தின் 14ஆவது மாநில மாநாட்டினை ஆட்சி மாற்றம் நடந்துள்ள தருணத்தில் தலைநகர் சென்னையில் நடத்துவது மகிழ்ச்சிக்குரியது. மிகவும் பொருத்தமானது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் போராட்ட விழுப்புண்களோடு பங்கெடுத்துள்ள அனைத்து பிரதிநிதிகளையும் சென்னை நகர தொழிலாளி வர்க்கத்தின் சார்பில் வரவேற்கிறேன். இவ்வாறு அவர் பேசினார். ●

# "தொழிற்சங்கம் இல்லை என்றால் அடிமைத்தனம் ஒழிந்திருக்காது!"

- சு.வெங்கடேசன்

தொழிற்சங்க இயக்கங்கள் இல்லை என்றால் ஆண்டான் அடிமைத்தனம் ஒழிந்திருக்காது என அரசு ஊழியர் சங்க மாநாட்டில் சு.வெங்கடேசன் எம்.பி., தெரிவித்தார். அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆவது மாநாடு சென்னையில் சனிக்கிழமை (டிச. 18) துவங்கியது. மாநாட்டை துவக்கி வைத்து மதுரை மக்களவை உறுப்பினர் சு. வெங்கடேசன் பேசுகையில், ஒரு நீண்ட போராட்ட வரலாறு கொண்ட இயக்கம் அரசு ஊழியர் சங்கம். இந்திய தொழிற்சங்க வரலாற்றில் தமிழகத்தின் தொழிற்சங்க இயக்க வரலாறு திரும்பி பார்க்க வைத்த வரலாறு என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இந்தியாவிலேயே தொழிற்சங்கத்தினு டைய குரலை அரசியல் குரலோடு இணைத்து முதலில் ஒரு முழக்கத்தை முன்வைத்தவர்கள், போராட்டத்தில் களம் கண்டவர்கள் தமிழர்கள்தான். தூத்துக்குடியில் வஉசி அதை மேற்கொண்டார். ஒரு சிறந்த தொழிற்சங்கவாதியாகவும், தேச விடு தலையின் தவிர்க்க முடியாத குரலாகவும் அவர் திகழ்ந்தார். அதன்பிறகு ஒரு வருடம் கழித்துதான் மும்பையிலே இந்திய தொழிலாளி வர்க்கம் அர சியல் பிரச்சனைகளில் தலையிடும் அளவிற்கு பக்கு வப்பட்டு விட்டது என லெனின் எழுதினார். தமிழக அரசு ஊழியர் சங்க வரலாற்றை பார்க்கும் போது 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாடு சுதந்திரம டைந்த 3 மாதத்தில் அரசு ஊழியர்கள் ஜகதீசனார் தலைமையில் போராட்டம் நடத்தினார்கள். நிலப் பிரபுத்துவப் பண்பாட்டில் மூழ்கித் திளைத்த ஒரு நாட்டில் நிலப்புரத்துவ மன நிலைதான் ஆட்சியாளர்களின் மனநிலையாக, அதிகார வர்க்கத்தின் மன நிலையாக இன்றுவரை இருக்கிறது. நவீன உலகமய மாக்கல் சூழலில் தொழிற்சங்க இயக்கம் என்ன செய்தது, தொழிற்சங்க இயக்கம் தொழில்களை அழித்தது, வேலை பணி கலாச்சாரத்தை அழித்தது என பல அறிஞர்கள் பொய்யுரைத்துக் கொண்டி ருக்கிறார்கள்.



ஆனால் தொழிற்சங்க இயக்கம் என்று ஒன்று இல்லை என்றால் இன்றுவரை ஆண்டான் அடிமை யான நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்தில் இருந்து இந்தியாவினுடைய எந்த அரசு அமைப்புகளும் விடு பட்டிருக்காது, அதை ஜனநாயக அமைப்பாக மாற்றி யது இந்திய தொழிற்சங்க இயக்கம்தான். ஆமாம் சாமி போடுகின்ற, கும்பிட்டு கிடக்கின்ற அந்த நிலப் பிரபுத்துவ மனநிலையை அரசு அலுவலகங்களில், தொழில் அமைப்புகளில் இருந்து விரட்டி ஜனநாயக அமைப்பாக. சட்டப்பூர்வமான உரிமையை பெற்ற பணியாளர்கள் என்ற இடத்திற்கு அவர்களை கொண்டு வந்து சேர்த்த பெருமை, சாதனை தொழிற் சங்கங்களையே சாரும். நீண்ட நெடிய போராட்டத்தில் அரசு ஊழியர் சங்கம் பயணித்திருக்கிறது. அரசு ஊழியர்கள் மக்க ளுக்கு அனுசரணையாக இல்லாதவர்கள், மக்களை விட்டு விலகியிருப்பவர்கள், மக்களை மீண்டும் மீண்டும் ஒரு அதிகாரத்தின் குரலின் வழியாக பார்க்கி றவர்கள் என்று தொடர்ச்சியாக கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகள்,

விமர்சனங்கள் மீண்டும் மீண்டும் கூறப்படும் இந்த நேரத்தில். அரசு ஊழியர் இயக் கங்கள் ஒரு மாபெரும் கருத்தியலோடு பொது சமூகத்தை சந்திக்கின்ற ஒரு காலமாக தற்போதைய காலம் உள்ளது. அதற்கு மிக முக்கிய காரணம் இரண்டு கோவிட் பெருந்தொற்று காலத்தில் மனி தர்களுக்கும், சமூகத்திற்கும் ஒவ்வொரு உயிரை காப்பாற்ற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில், மரணத்திற்கு அருகில் பணி செய்தவர்கள் அரசு ஊழியர்கள் என்பதை கம்பீரமாக கூறமுடியும். சமூ கத்தில் எந்த பிரிவும் பார்க்காத வேலையை தொற்று காலத்தில் ஒருவர் கூட மரணமடையாத அரசு அலு வலகம் கூட இருக்காது. எந்த சமூகப் பிரிவும் செய்யாத தியாகத்தை செய்தவர்கள் அரசு ஊழியர்கள்.

5 விழுக்காடும், அரசு மருத்துவமனைகளுக்கு 75 விழுக்காடும் ஒதுக்கினார். தனியார் மருத்துவமனை எவ்வளவு நபருக்கு தடுப்பூசி செலுத்தியுள்ளது, அரசு மருத்துவமனைகள் எவ்வளவு நபருக்கு தடுப்பூசி செலுத்தியுள்ளன என்ற விவரத்தை அளியுங்கள் என கடந்த புதனன்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினேன். அதனடிப்படையில் அரசு வழங்கிய அந்த விவரத்தில், 110 கோடி மக்களுக்கு செலுத்தப் பட்டுள்ள தடுப்பூசிகளில் தனியார் மருத்துவமனை கள் வெறும் 3.7 விழுக்காடு தடுப்பூசிகள் மட்டுமே செலுத்தியுள்ளன. ஆனால் அரசு மருத்துவமனை கள் 76.7 விழுக்காடு தடுப்பூசிகள் செலுத்தியுள்ளன. எவ்வளவு பெரிய பேரழிவு காலத்திலும் தனியார் நிறு வனங்கள் மக்களை நடு ஆற்றில் விட்டு விட்டு செல் வார்கள், ஆனால் மக்களை காப்பாற்றுவது அரசு ஊழியர்கள் என்பதை சுட்டிக் காட்டினார். அரசு ஊழியர்களுக்கு எதிராக, அரசு நிறுவனங்க ளுக்கு எதிராக மிகப்பெரிய அளவில் வெளியே கட்ட மைக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

ஒன்றிய அரசு கொண்டு வந்த 3 வேளாண் சட்டங் களை எதிர்கட்சிகளால் 5 நிமிடம் கூட நிறுத்தி வைக்க முடியவில்லை. ஆனால் போராட்ட களத்தின் மூலம் அந்த சட்டத்தை வாபஸ்பெற வைத்திருக்கிறார்கள் விவசாயிகள். இந்திய அரசியலை தீர்மானிப்பது அதிகாரவர்க்கத்தின் வடிவமாய் இருக்கின்ற அமைப்பல்ல? உழைக்கும் மக்களின் உரிமைக் குரலை பிரதிபலிக்கின்ற போராட்ட களம்தான் என் பதை இந்திய வரலாற்றில் இதுவரை இல்லாத அள விற்கு நெற்றியில் அறைந்து தீர்மானித்திருக்கிறார் கள். அவர்கள் நடத்திய 1 ஆண்டு போராட்டம் முக்கிய மானது. பிரதமர் வாபஸ் பெறுகிறேன் என்று கூறிய பின்னரும் அடுத்து 22 நாட்கள் அவர்கள் நடத்திய போராட்டம்தான் அதைவிட முக்கியமானது. நீ வீட்டை விட்டு வா என்றால் வருவதற்கும், நீ வீட்டிற்கு போ என்றால் போவதற்கும் நாங்கள் என்ன பாஜக எம்பியா? இந்த நாட்டினுடைய விவசாயிகள், தொழிலாளிகள். நாங்கள் எப்போது வீட்டிற்கு செல்ல வேண்டும் என்று நாங்கள் தீர்மானிப்போம் உன் வார்த்தையில் உண்மையில்லை, நம்பிக்கை யில்லை என்று போராட்டத்தை தொடர்ந்தார்களே அதுதான் விவசாயிகளின் மிகப்பெரிய வெற்றி என்றார்.

700 பேர் உயிரை பறிகொடுத்து, அறவழியில் நின்று போராடியதால் இந்த சட்டம் வாபஸ் பெறப்பட்டது என்று எந்த பத்திரிகையும், ஊடகங்க ளும் கூறவில்லை. மாறாக இந்த சட்டத்தை வாபஸ் பெற்றதால் இந்தியாவிற்கு எவ்வளவு பெரிய இழப்பு என்றுதான் எழுதினார்கள். இதுதான் கார்ப்பரேட்டுகள் கட்டமைக்க நினைக்கின்ற இந்தியா. எவ்வளவு போராடினாலும், தியாகம் செய்தா லும் அதற்கெதிரான பொதுபுத்தியை கட்டமைப்போம் என்று கட்டமைக்கும் இந்த காலத்தில் அரசு ஊழி யர்களுக்கு எதிராக கட்டமைக்கப்படும் அனைத்து கட்டமைப்புகளையும் மக்களின் துணையோடு வென்று காட்டுகின்ற, உடைத்துக் காட்டுகின்ற மகத்தான பணி உங்களுடையது, அதை நீங்கள் வலிமையாக மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

புதிய ஓய்வூதிய திட்டம், காலிப் பணியிடங்களை நிரப்பாதது இவையெல்லாம் ஒரு ஆட்சியின் கொள்கை சார்ந்த விஷயம் மட்டுமல்ல, ஒட்டு மொத்தமாக மூலதனத்திற்கும், பெரு முதலாளி களும், கார்ப்பரேட்டுகளும் கடைபிடித்துக்

கொண்டிருக்கின்ற கொள்கையினுடைய பகுதிகள். எனவே தான் முழுக்க முழுக்க பள்ளிகள், சுகாதாரம் என அனைத்து துறைகளும் தனியார்மயத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த பின்னணியில் தான் வேலைவாய்ப்பை பறிப்பது, புதிய நியமனங்க ளுக்கு மறுப்பது போன்றவை சத்தமில்லாமல் நடந்து கொண்டிருக்கின்றன என்றார். சமூக நலனை உறு திப்படுத்துவதற்குத்தான் ஓய்வூதிய திட்டம். அந்த ஓய்வூதியத்தை தர மறுகிறது அரசு. ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் நீதிபதிகளுக் கான ஓய்வூதியம் 5 வருடங்களில் இரண்டு மடங்காக உயர்த்த ஒரு மசோதா தாக்கல் செய்யப்பட்டு அது நிறைவேற்றப்பட்டும் விட்டது. சமூகத்தில் புதிய ஓய்வூ திய திட்டம் அமல்படுத்தும்போது, எங்களுக்கு மட்டும் ஓய்வூதியம் வழங்கப்படுவது, உயர்த்தப்படுவது சலு கையா அல்லது அதற்கு வேறு பெயரா என கேட்கின்ற ஒரு குரல் நீதித்துறையில் இருந்து வந்தால் அதுதான் நீதியின் குரல் என்றார்.

மக்களை பிரித்தாளுகின்ற வேலையை மட்டுமே அரசியல் என்று கூறும்போது, அனைத்து முன்னேற் றங்களையும் பின்னுக்கு தள்ளுகின்ற சூழல் நிலவிக் கொண்டிருக்கிறது. வகுப்புவாதத்தை கிளப்பிவிட்டு அனைத்து முக்கிய பிரச்சனைகளையும் திசை திருப்பிக் கொண்டிருக்கிறார்கள். அரசு அலுவலகங்க ளில் எந்த மதத்தினுடைய அடையாளங்களும் இருக்கக் கூடாது, மதச்சார்பின்மை கோட்பாட்டின் அடையாளமாக இருக்க வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகிறது. அந்த அரசியல் சாசனம் கூறும் அந்த பிரிவை அரசு அலுவலகங்களில் நிறை வேற்றுவதை உறுதிப்படுத்தும் இடத்தில் நாம் இருக் கின்றோம். சமூக நீதியை, பாலின சமத்துவத்தை பேணிக்காக்க வேண்டும் என்றார். அடுத்த 5 ஆண்டுகளில் தற்போது நிரந்தரப் பணியில் இருப்பவர்களில் 40 முதல் 60 விழுக்காட்டினர் பணி யை இழக்கப் போகிறார்கள். அடுத்த 10 ஆண்டு களுக்குள் இந்திய சமூகம் சந்திக்கப் போகின்ற சுனாமி சாதாரணமானதல்ல. ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்ய மனிதன் தேவையில்லை என்பதுதான் 4ஆவது தொழில்புரட்சியின் ஒற்றை வாசகம். முதல் தொழில்புரட்சி 10 ஆயிரம் பேர் வேலை செய்த ஒரு நூற்பாலையில், ஒரு நீராவி என்ஜினை கொண்டு வந்து 1000 பேராக குறைந்தது. ஒரு அரசு அலுவலகத்தில் ஆயிரம் பேர் செய்யும் பணியும் இனி 3 ரோபோக்கள் செய்யவிருக்கின்றன. மீண்டும் மீண்டும் மோடி 4ஆவது தொழில் புரட்சியை குறித்து பேசிக்கொண்டே இருக்கிறார். அது மோடியின் குரல் அல்ல, அதானியின், அம்பானியின் குரல், கார்ப்பரேட்டுகளின் குரல், உலக மூலதனத்தின் குரல். எனவே ஒற்றையாக ஒரேமாதிரி பணியாற்றிக் கொண்டிருக்கின்ற 60 விழுக்காட்டினர் அடுத்த 5 ஆண்டுகளில் வீட்டிற்கு அனுப்பப்பட இருக்கிறார்கள். பொதுச்சமூகத்தில் உருவாகின்ற கொந்தளிப்பை அரசு ஊழியர்களுக்கு எதிராக திருப்பி விடுகின்ற வேலை மிக எளிதில் நடைபெறும்.

சுதந்திர போராட்டம் நடைபெற்ற காலத்தில் அடிமை இந்தியாவில் இருந்ததை விட இப்போது நிலைமை மோசமாக இருக்கின்றது. அடிமை இந்தி யாவின், காலனி இந்தியாவின், 10 விழுக்காடு மக்களி டம் இருந்த 50 விழுக்காடு செல்வமும் வருமானமும் இருந்தது. 2009க்கும் 2019க்கும் இடையே இப்போது 10 விழுக்காடு மக்களிடம் 57 விழுக்காடு செல்வமும், வருமானமும் இருக்கின்றது. இது காலனி ஆட்சிக்காலத்தில் இருந்ததைவிட மிக மோச மான நிலை. இது சமூகத்தில் ஒரு பெரும் கொந்த ளிப்பை உருவாக்கும். அந்த கொந்தளிப்பில் ஆளும் வர்க்கம் தனது கேடயமாக பயன்படுத்தப்போவது அரசு ஊழியர்களைத்தான் என்பதை மறந்து விடா தீர்கள். எனவே ஒட்டுமொத்த அரசியல் பார்வையோடு இணைந்து உங்கள் பயணத்தை தொடர வேண்டும், வலிமையாக இயக்கத்தை கட்டமைக்க வேண்டும். நாங்கள் உங்கள் கேடயமல்ல, மூலதனத்திற்கும், உழைப்பு சுரண்டலுக்கும் எதிராக போராடுகின்ற, மக்களின் தோழர்கள் நாங்கள் என்பதை அரசிய லாக நிரூபிக்கின்ற இயக்கமாக, வடிவமாக அரசு ஊழியர் சங்கம் செயல்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

●

# ஒற்றைக் கோரிக்கை மாநாடு! வெற்றி காண கூடுவோம் உறுதியோடு!

- மு.அன்பரசு

டிசம்பர் 18, 19 தேதிகளில் சென்னையில் நடை பெறும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற மாபெரும் இயக்கத்தின் 14ஆம் மாநில மாநாடு தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுத்துறை மற்றும் அரசு சார்ந்த பணிகளில் உள்ள பெரும் பான்மை ஊழியர்களிடையே ஆர்வம் கலந்த எதிர்பார்ப்பி னை ஏற்படுத்தியிருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு இருக்கவேண்டிய பொறுப்பே எதிர்காலத் தலைமுறையினர் பெருமை யோடு சொல்லிக்கொள்கிற அடிச்சுவடு ஒன்றை விட்டுச் செல்வதே ஆகும். பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்ததாகவோ, தொகுப் பூதியம் மதிப்பூதியத்தில் பணிபுரியும் ஊழியர்களை காலவரை ஊதியத்தில் கொண்டு வந்ததாகவோ, ஊதிய முரண்பாடுகளை களைந்ததாகவோ அரசுத் துறைகள் தனியார் மயத்தைத் தடுத்து நிறுத்தியதாகவோ மட்டு மல்ல; அரசு ஊழியர்கள் இழந்திருக்கிற, அவர்களிடமி ருந்து பறிக்கப்பட்டிருக்கிற அனைத்து உரிமைகளை யும் பெற்றுத்தந்ததாக இருக்க வேண்டும். அதற்கான ஆரம்பப் புள்ளியாக இந்த மாநாடு இருக்கும்.

### கொத்தடிமை போன்ற நிலை அகலட்டும்

இன்றைக்கும் கொத்தடிமை கூலிமுறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூக வனப் பாதுகாவலர்கள், சமூகநலத்துறை உடனாட்கள் போன்றவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மை களும் இல்லாமல் உழன்று வருகின்றனர். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சென்ற சட்டமன்றத் தேர்தலின்போது தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் போன்ற கூலிமுறைகள் ஒழிக்கப் பட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்ற முக்கியமானதொரு வாக்குறுதியை தெரிவித்தார். ஆனால் அது குறித்து இதுநாள் வரையில் எவ்வித அறிவிப்புகளும் வெளியாகவில்லை. அம்மாவின் ஆட்சியை நடத்துவதாக கூறிக்கொண்ட எடப்பாடி பழனிசாமி அம்மாவின் வாக்குறுதியையும், சட்டமன்றத் தில் விதி எண்.110ன் கீழ் வெளியிட்ட ஜெயலலிதா அம்மையார் வெளியிட்ட அறிவிப்பினையும், காற்றில் பறக்க விட்டார். சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வரும் சத்துணவு அங்கன்வாடி வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், கல்வித்துறையில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள், தொகுப்பூதியத்தில் பணியாற்றும் சிறப்பு ஆசிரியர்கள், செவிலியர்கள், பலநோக்கு மருத்துவமனைப் பணியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட திமுக அரசிடம் ஏற்கெனவே கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை உடனே வழங்கிடக் கோரிக்கை

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 1.1.2016 முதல் ஊதிய மாற்றம் பெற்று விட்டார்கள். காவல்துறை ஐ.பி. எஸ் அதிகாரிக ளும் 1.1.2016 முதல் ஊதியமாற்ற நிலுவையை பாக்கி யின்றி ஊதியம் பெற்று விட்டார்கள். மக்கள் பிரதிநிதி களாய் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் முதல் கேபினட் அமைச்சர்கள் வரை 100 சதவீத சம்பள உயர்வு பெற்று விட்டனர். ஐந்தாண்டுகள் மட்டுமே சட்ட மன்ற உறுப்பினர் பதவியில் இருந்தாலும் அவர்கள் ஆயுள் முழுவதும் ஓய்வூதியம் பெற அந்தத் தொகையும் உயர்த்தப்பட்டுள்ளது. மாவட்ட நீதிபதிகளும் 1.1.2016 முதல் ஊதிய நிலுவைத் தொகை பெற்றுவிட்டார்கள். அரசாங்கத்தின் உயர் பதவிகளில் உள்ளவர்கள் மட்டும் ஒரு நயா பைசா மீதம் வைக்காமல் ஊதிய மாற்ற நிலுவைகள் பெறும் போது அரசு ஊழியர்க ளுக்கும் ஆசிரியர்களுக்கும் மட்டும் அது வழங்கப்படா தது சமத்துவம் சம உரிமை பேசும் மக்களாட்சித் தத்துவத்திற்கு விரோதமானது ஆகும். எனவே, தமிழக முதல்வர் அரசு ஊழியர்கள் கோரிக்கையில்

உள்ள நியா யத்தை உணர்ந்து 1.1.2016 முதல் அனைத்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கும் ஊதியமாற்ற நிலுவைத் தொகை வழங்க வேண்டும் என தமிழக முதல்வரிடம் முறையிடப்பட்டுள்ளது.

### பணிவரன்முறை – ஊதியம்

2003, 2004 மற்றும் பல்வேறு காலகட்டங்களில் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர் கள், அரசு ஊழியர்கள் மற்றும் பணியாளர்களின் பணிக் காலத்தினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப் படுத்தி ஊதியம் வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையும் பல ஆண்டுகளாக நிலவையில் உள்ளது. அதையும் திமுக அரசு பரிசீலிக்க கோரப் பட்டுள்ளது.

### தமிழகம் தலை நிமிர வேண்டும்

இந்தியாவில் தமிழகம் எப்போதும் முன்னோடி மாநிலமாக இருந்து வந்திருக்கிறது. சமூகநீதி, சமத்து வம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், பெண் களுக்கான உரிமை போன்ற பல தளங்களில் முன்னோ டியாக இருந்த மாநிலம் தற்போது எல்லாவற்றிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதற்கு காரணம் தமிழகத்தில் கல்வி, வேலைவாய்ப்புகளில் இம்மாநில இளைஞர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுவதும் அரசுப்பள்ளிகள் மற்றும் அரசுத்துறைகளை தனியார் மயமாக்கும் முயற்சிகள் நடைபெறுவதும் ஆகும். அரசு அலுவலகங்களில் அரசு ஊழியர்களும் அரசுப்பள்ளிக ளில் ஆசிரியர்களும் முழுமையான அளவில் நியமிக்கப் பட்டு பணி செய்யும் வாய்ப்புகள் வழங்கப்பட்டு ஒன்றிய அரசுக்கு இணையான உரிமைகளும் ஊதியமும் வழங்கப்பட்டால் அனைத்துத் துறைகளிலும் முன்னேற உழைப்பதுடன் சமுதாய மேம்பாட்டையும் பேணிக் காப்பதில் தீவிர கவனம் செலுத்துவார்கள். இதை இப்போதுள்ள அரசு கவனத்தில் கொள்ள வேண்டியதன் அவசியத்தை இந்த மாநாடு உணர்த்தும்.

### மறுக்கப்பட்டுள்ள சட்டப்படியான உரிமைகள்

சட்டங்களாலும் நிர்வாக விதிமுறைகளாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை தருவதற்கு அரசாங்கங்கள் மறுப்பதும், குறைப்பதும், நிலுவைகளை தரமுடியாது எனக் கூறுவ தும், ஊழியர்களுக்கான உத்தரவாதப்படுத்தப்பட்ட உரிமைகள் மறுக்கப்படும்போது நீதிமன்றம் அரசை அதைக் கொடுக்கச்சொல்லி வலியுறுத்தாமல் இருப்ப தும், தங்களது மறுக்கப்பட்ட உரிமைகளைக் கேட்டு ஊழியர்கள் போராட்டம் நடத்தினால் அதற்கு தடை விதிப்பதும் மக்களாட்சித் தத்துவத்தை கேலிக் கூத்தாக்கும் நிகழ்வுகள்.

ஊதிய முரண்பாடுகளைக் களைய பத்தாண்டுகளு க்கு மேலாக போராடுகிறோம். வஞ்சிக்கப்படுகிறோம். பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடர வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுக்கிறோம் போராடுகிறோம். ஊதிய நிலுவை கேட்டு போராடுகிறோம். முள்வேலி தடுப்புகளால் முடக்கப்படுகிறோம். சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு வரையறுக்கப் பட்ட ஊதியத்தை வழங்க வேண்டி போராடுகிறோம், அவை வெறும் பரிசீலனையில் உள்ள அறிவிப்புகளா கவே உள்ளன. தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று குரல் கொடுத்தால், “பணியா ளர்கள் பகுப்பாய்வுக் குழு” என்ற ஒரு குழு அமைக் கப்பட்டு நிரந்தரப் பணியிடங்களை ஒப்பந்தப் பணி யிடங்களாகவோ அல்லது தற்காலிகப் பணியிடங்களா கவோ மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப் படுகிறது. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுங்கள், காலிப் பணியிடங்களை நிரப்புங்கள் என்று சங்கெடுத்து ஊதுகிறோம்; அரசா ணைகள் போடப்பட்டு ஆசிரியர் பணியிடங்கள் ஒழிக்கப் படுகின்றன. இடைநிலை ஆசிரியர்களுக்கு ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படாமல் விடப்பட்டுள்ள அநீதியை எடுத்துரைக்கிறோம்; அதில் முனைப்பு காட்டாமல் தொடக்கப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளுடன் இணைக்கும் முடிவுகள் வேகமாக மேற்கொள்ளப் படுகின்றன. வெயிலோ, மழையோ, பனியோ, புயலோ எத்தகைய இடர்ப்பாடுகளிலும் இயற்கைப் பேரிடர்களி லும் மக்கள் சேவையாற்ற அரசு ஊழியர்கள் உறுதுணை யாக இருந்து வருகிறார்கள். இந்த நடவடிக்கையை சேவையாகப்பார்க்காமல் ஒரு அரசாங்கம் செலவாகப் பார்க்கும் தன்மை இரக்கமற்றது.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தைக் கைவிடக்கோரியும், இளை ஞர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் அரசின் அர சாணை எண்.56ன் மூலம் அரசுத்துறையில் ஆட் குறைப்பு நடவடிக்கைகளைக் கைவிடக்கோரியும், சத்துணவு அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியா ளர்கள், ஊர்ப்புற நூலகர்கள் உள்ளிட்ட சிறப்பு கால முறை ஊதியம் பெறும் மூன்றரை லட்சம் ஊழியர்களு க்கு காலமுறை ஊதியம் வழங்கிட வலியுறுத்தியும் தமிழக அரசுத்துறைகளில் காலியாக உள்ள நாலரை லட்சம் பணியிடங்களை உடனே நிரப்பிடக் கோரியும் தொடர்ந்து நாம் மேற்கொண்டு வரும் கோரிக்கைகள் ஈடேற வேண்டும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவும் இந்த மாநாடு உதவிடும்.

புதிய பொருளாதாரக் கொள்கைகள் ஏற்படுத்தியுள்ள சீரழிவுகள்

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் இன்றைய அரசாங்கங்கள் தாங்கள் மக்களுக்கு செய்ய வேண்டிய சேவைகளை தனியார்வசத்திடம் ஒப்படைப் பதன் மூலம் தங்களுக்கான கடமைகளிலிருந்தும் ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களை தாயுள்ளத்தோடு தாங்கிப் பிடிக்கும் தர்மத்திலிருந்தும் விலகிக் கொள்ள நினைக்கின்றன. அரசாங்கம் என்ற சேவைமையம் தனி யார்மயம் என்ற லாபமயத்திடம் அடகுவைக்கப்பட்டு விட்டது. இதன் விளைவு இளைஞர்களின் எதிர் காலத்தை பாதிக்கும் என்பதை நன்கறிந்தும் தமிழக அரசாங்கம் தனியார் நிறுவனத்தைப்போல் அரசு நிர்வா கத்தை 'அமர்த்து - துரத்து' என்ற அடிப்படையில் நடத்த ஆரம்பித்துள்ளது.

அரசாங்க வேலையில் சேர்பவர்களுக்கு இனிமேல் ஓய்வூதியம் என்பது அவர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியமாகத்தான் இருக்கும் என்பதிலிருந்து தொடங்கி இன்று அரசுத்துறைகளையே தனியார் சசம் ஒப்படைக்கும் நிலைமைக்கு அரசு நிர்வாகம் வந்திருக்கிறது. இதன்விளைவுகள் நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத சமூகப் பிரச்சனைகளை ஏற்படுத்தும் என்பதைப்பற்றி ஆட்சியாளர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. அரசு நிர்வாகத்தை ஏழை, எளிய மக்களுக்குரிய பாதுகாப்புடன் மக்களின் அடிப்படைத் தேவைகள் பாதிக்காத வகையில் நிர்வகிக்க தனியார் மயங்களும், அவுட் சோர்சிங் முறைகளும், ஆட்குறைப்பு நடவடிக்கைகளும் ஒருபோதும் உதவாது.

அரசாங்க வேலைக்கு ஆள் எடுப்பதில் சுணக்கம், காலிப்பணியிடங்களை நிரப்பாமல் அப்படியே விட்டு விடுதல், புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாதது; தேவைப்படும் இடங்களில் தற்காலிகப் பணியாளர்க ளை நியமித்துக் கொள்ளுதல், வேலை முடிந்ததும் அவர்களை விரட்டிவிடுதல், ஒப்பந்த முறையில் பணி யாளர்களை அமர்த்துதல், அவுட்சோர்சிங் முறையில் ஊழியர்களை நியமித்தல் போன்ற பலகட்ட வடிகட்ட லுக்குப்பின்னர் தமிழக அரசு பெரும்பான்மையான துறைகளை தனியார்வசம் ஒப்படைக்கும் முடிவில் உள்ளது. இதை எதிர்த்து அரசு ஊழியர்கள் மட்டும் போராடினால் போதாது. தனியார் மயமாக்கலின் விளை வுகளை மக்களிடம் பிரச்சாரம் செய்து இதை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினால் தவிர தனியார் மயம் என்ற ஆபத்து இந்த நாட்டை விட்டு நீங்காது.

தமிழக அரசாங்கத்தில் பல்வேறு அரசுத்துறை களில் தொகுப்பூதியம், மதிப்பூதியம், வரையறுக் கப்படாத ஊதிய விகிதம், தினக்கூலி ஆகியவற்றின் கீழ் லட்சக்கணக்கான ஊழியர்கள் பணியாற்றி வரு கின்றனர். லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டு வேலைக்காக காத்துக்கிடக்கின்றனர். இந்த இளை ஞர்களின் எதிர்காலத்தை வேலையில்லாத் திண் டாட்டம் மிகவும் இருளடையச் செய்து வருகிறது. இந்தி யாவில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டு வேலைக்காக காத்திருப்போர் எண்ணிக்கை பத்துகோடியை நெருங்கிக் கொண்டி ருக்கிறது என்றும், கிராமப்புறங்களில் வேலை கிடைக் காத நபர்களின் எண்ணிக்கை 20 கோடி பேர்களுக்கும் மேல் என்றும் பல்வேறு நிறுவனங்களின் ஆய்வறிக்கை கள் தெரிவிக்கின்றன. இந்த நிலைக்கு தீர்வு வேண்டிய நிலையில் ஒன்றிய -மாநில அரசுகள் உள்ளன.

தமிழக அரசுத்துறைகளில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் விடப்பட்டுள்ள நிலை ஒரு

புறமிருக்க, படித்துவிட்டு வேலை வழங்கப்படாமல் இருக்கும் இளை ஞர்களும் பெண்களும் மறுபுறம். இவற்றுக்கிடையில் இளைஞர்களையும், பெண்களையும் மிகக்குறைந்த கூலிக்கு வேலைக்கு அமர்த்தி அவர்களின் உழைப்புச் சக்தியைச் சுரண்டும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது. இத்தகைய கொத்தடிமை கூலிமுறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள், சமூகநலத்துறை உடனாட்கள் போன்ற பல்வேறு பணிகளை செய்யக்கூடிய ஊழியர்களின் உழைப்பு முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப் பட்டு வருகிறது. இவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர்.

இதேபோல் ஒன்றிய அரசின் திட்டங்களின் கீழ் மாநிலங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் நிறுவனங்களிலும் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் நிறுவனங்களிலும் முற்றிலும் ஒப்பந்த முறையில் ஊழியர்கள் நிய மிக்கப்பட்டு குறைவான ஊதியத்தில் பணியில் அமர்த்தப்படுகின்ற போக்குகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தேசிய பார்வைகுறைபாடு கட்டுப்பாட்டு கழகம், மாநில தொழு நோயாளிகள் கழகம், தேசிய ஊரக சுகாதாரப் பணி, தேசிய நகர்ப்புற சுகாதாரப்பணி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம், தமிழ்நாடு மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்து கழகம், நோயாளிகள் நல கழகம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் போன்ற நிறுவனங்களின் சேவைகள் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு நிறுத்தப்பட்டு விடக் கூடியவை அல்ல. காலவேக மாற்றத்தில் இத்தகைய நிறுவனங்கள்/ கழகங்கள்/வாரியங்கள் தொடர்ந்து இயங்க வேண்டிய அவசியம் உள்ள நிலையில் அங்கு பணிபுரியும் ஆயிரக்கணக் கான ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு ஊழியம் செய்வதானது, அர சாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும்.

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தனித்தன்மைகள்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசு ஊழியர்க ளுக்காக மட்டுமல்லாமல் சமூக அவலங்களுக்காக வும் அநீதிகளை எதிர்த்தும் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறது. விவசாயிகள், மாணவர்கள், பெண்கள் என அனைத்து தரப்பினர் உரிமைகளுக்கா கவும் குரல் கொடுப்பதும் போராட்டம் நடத்துவதும் அதன் சமூக குணமாகும். ஆசிரியர் சமுதாயத்துடன் இணைந்து ஜாக்டோ ஜியோ என்ற கூட்டியக்கத்தின் மூலம் தனி முத்திரை படைத்துள்ளது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனி கொட்டகை போட்டு தன்னை தனிமைப்படுத்திக்கொள்ளாமல் உழைப்பாளர் வர்க்கம் என்ற பொதுபிரவாகத்தில் தன்னை இணைத்துக்கொண்டுள்ள இயக்கமாகும். ஒன்றிய மாநில அரசுகளின் மக்கள்விரோத கொள்கைகளுக்கு எதிராக மாநில அளவிலும் இந்திய அளவிலும் போராட் டம் நடத்தும் இயக்கமாகும். இன்று நமது நாட்டின் மக்கள் ஒற்றுமையை சிதைக்கும் வண்ணம் வகுப்பு வாதத்தையும் சாதி பேதங்களையும் தேச விரோதங்க ளையும் ஊக்குவிக்கும் சக்திகளை எதிர்த்து கேட்கும் போராட்ட குணம் கொண்ட இயக்கமாகவும் இது உள்ளது.

அத்தகைய போராட்ட உணர்வுகளை தட்டி எழுப்பும் விதமாக, விடை தேடும் களமாக தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டின் நிகழ்வுகள் அமைக்கப்பட்டுள்ளன. அரசு ஊழியர் சமு தாயத்தின் புதிய விடியலுக்கான மாநாடாக இது நிச்சயம் இருக்கும். அதை மாநாட்டில் கலந்து கொண்டு உறுதிப் படுத்த அனைத்து அரசுத்துறை ஊழியர்களும் மாநாட்டு க்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள். கூடுவோம், பேசுவோம், அரசிடம் கோரிக்கை வைப்போம். ஆட்சியா ளர்களை திரும்பிப் பார்க்க வைப்போம். நிச்சயம் பறிக்கப்பட்ட உரிமைகளையும் நிறுத்தப்பட்ட சலுகை களையும் பெற்றே தீருவோம்!

கட்டுரையாளர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தரைவர்.

**நன்றி: தீக்கதிர்**

# தொன்றுதொட்டு வரும் தொப்புள்கொடி உறவு, தொடரட்டும்!

- மு.அன்பரசு

- **மிகுந்த மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு தமிழக முதல்வரே !**
- **தென்னகத்திலே இருந்து கொண்டு இந்திய அரசியலுக்கு வழிகாட்டும் தலைவரே!**
- **ஆண்டால் எப்படி ஆள வேண்டும்? வாழ்ந்தால் எப்படி வாழ வேண்டும் என்று அகிலத்திற்கு பறைசாற்றும் பண்பாளரே!**
- **ஆட்சியாக ஒளிர்ந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் அரசு ஊழியர்களின் மனசாட்சியாகத் திகழும் கொற்றவரே!**
- **எங்களுக்கும் உங்களுக்கும் உள்ள உறவு திங்களுக்கும் ஞாயிறுக்கும் உள்ள உறவென்று, இன்று, சனிக்கும் எதிர் அணிக்கும் உறுதி செய்திருக்கும் கதிரவரே!**
- **மார்கழியில் பனியில்லாமல் போகுமானால் அதற்கு காரணம் சூரியன்; மாநிலத்தில் படையில்லாமல் போகுமானால் அதற்கு காரணம் அரசு ஊழியன், ஒவ்வொரு அரசு ஊழியரும் இம்மாநில மக்கள் நலன் காக்கும் படைவீரர்கள், லட்சக் கணக்கான அரசு ஊழியர்களின் தங்கத் தளபதி நீங்கள் !**

1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட போது அதன் முதல் மாநாட்டில் கலந்துகொள்ள முதலில் நாங்கள் அழைத்தது திமுக தலைவர் கலைஞரைத்தான். மற்ற சில தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள யோசித்த நேரத்தில் சற்றும் தாமதியாமல் சம்மதம் தெரிவித்தவர் அப்போது எதிர்கட்சியாக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர்தான்.

2007 டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த நேரம். இதே ராம் லட்சுமி அரங்கில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பிரதிநிதித்துவ பேரவை நடந்து பொது மாநாடு தீவுத்திடலில் நடந்தது. அந்த மாநாட்டில் தமிழக முதல்வராக கலந்து கொண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலையில் மணிமகுடம் சூட்டியவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர். அந்த மாநாடு நடந்து 14 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட நிலையில் அதே ராமலட்சுமி அரங்கில் நடைபெறும் இந்த 14ஆம் மாநில மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இன்றைய தலைவராக, முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்களின் தனயனாக தாங்கள் கலந்து கொண்டு எங்களை சிறப்பித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

இதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புவதற்கான காரணம் எதிர்கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும் திமுகவிற்கும் அரசு ஊழியர் சங்கத்திற்கும் இடையே உள்ள உறவு தொன்றுதொட்டு வரும் தொப்புள் கொடி உறவு என்பதை சுட்டி உணர்த்தத் தான்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலங்களில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சிலபல போராட்டங்களை நடத்தியிருக்கிறது. உரிமைக்கான போராட்டங்களில் ஒரு தாயின் வயிற்றில் வந்த உடன்பிறப்புகளுக்குள் ஏற்படும் பிணக்குதான் அது. உரிமைக்கான போராட்டங்களில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எப்போதும் சமரசம் செய்து கொண்டதில்லை. அதேபோல தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்திய உரிமைப் போராட்டங்களில் உள்ள நியாயங்களை அலசி ஆராய்ந்து அரசு ஊழியர்களுக்கான உரிமைகளையும் சலுகைகளையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வழங்கியது போல் வேறு எந்த ஆட்சியும் வழங்கியதில்லை.

மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்ன "உறவுக்கு கை கொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம்." என்ற பொன்மொழிக்கேற்ப தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உரிமைக்கு குரல் கொடுக்கும். அதே நேரத்தில் திமுக உடனான உறவுக்கு கைகொடுக்காமல் விட்டதில்லை. அதை இன்னொருமுறை உறுதிப்படுத்திட, உறவுக்கு கைகொடுத்திட வந்திருக்கும் தமிழக முதல்வர் அவர்களை தமிழகத்தின் அனைத்து அரசுத்துறை மற்றும் அரசு சார்ந்த துறைகளில் பணிபுரியும் லட்சக்கணக்கான ஊழியர்களின் சார்பில் அகமகிழ்ந்து வரவேற்பதில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பெருமிதம் கொள்கிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற மாபெரும் இயக்கத்தின் இந்த 14ஆம் மாநில மாநாடு தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுத்துறை மற்றும் அரசு சார்ந்த பணிகளில் உள்ள அனைத்து ஊழியர்களிடையேயும் ஆர்வம் கலந்த எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியிருக்கிறது. அதிலும் தமிழக முதல்வர் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதால் அந்த ஆர்வம் அனைத்து தரப்பினரிடையேயும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அதிலும் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக புறக்கணிக்கப்பட்ட, பறிக்கப்பட்ட மற்றும் மறுக்கப்பட்ட உரிமைகளாலும், சலுகைகளாலும் துவண்டு போயிருக்கும் அரசு ஊழியர்களுக்கு புத்துணர்வு ஊட்டக்கூடிய அறிவிப்புகள் ஏதாவது வருமா என்ற எதிர்பார்ப்பும் இந்த மாநாட்டின் மீது விழ ஆரம்பித்திருக்கிறது.

இந்தியாவில் தமிழகம் எப்போதும் முன்னோடி மாநிலமாக இருந்து வந்திருக்கிறது. சமூகநீதி, சமத்துவம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், பெண்களுக்கான உரிமை போன்ற பல தளங்களில் முன்னோடியாக இருந்த மாநிலம் கடந்த பத்து ஆண்டுகளில் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதற்கு காரணம் தமிழகத்தில் கல்வி வேலைவாய்ப்புகளில் இம்மாநில இளைஞர்களுக்கு வாய்ப்புகள் கடந்த பத்தாண்டுகளில் மறுக்கப்பட்டதும் அரசுத் - துறைகளை தனியார்மயமாக்கும் முயற்சிகள் நடைபெற்றதும் ஆகும். அரசு அலுவலகங்களில் அரசு ஊழியர்களும் அரசுப்பள்ளிகளில் ஆசிரியர்களும் முழுமையான அளவில் நியமிக்கப்பட்டு பணி செய்யும் வாய்ப்புகள் வழங்கப்பட்டு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சலுகைகளும் உரிமைகளும் ஊதியமும் வழங்கப்பட்டால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற உழைப்பதுடன் சமுதாய மேம்பாட்டையும் பேணிக்காப்பதில் இன்னும் தீவிர கவனம் செலுத்துவார்கள்.

அரசு ஊழியர்களாகிய நாங்கள் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக ஊதிய முரண்பாடு களைக் களைய போராடுகிறோம். பழைய ஓய்வுதியத் திட்டத்தை தொடர வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுக்கிறோம். ஊதிய நிலுவை கேட்டு போராடுகிறோம். சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் சத்துணவு, அங்கன்வாடி ஊழியர், வருவாய் கிராம உதவியாளர், எம்.ஆர்.பி. செவிலியர்கள் மற்றும் ஊர்ப்புற நூலகர்கள் அனைவருக்கும் வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் வாழ்க்கைக்கான ஓய்வூதியம் போன்றவற்றை வழங்க வேண்டி போராடுகிறோம், அவை வெறும் பரிசீலனையில் உள்ள அறிவிப்புகளாவே உள்ளன. தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று குரல் கொடுத்தபோது, கடந்த அரசால் "பணியாளர்கள் பகுப்பாய்வுக் குழு" என்ற ஒரு குழு அமைக்கப்பட்டு நிரந்தரப் பணியிடங்களை ஒப்பந்தப் பணியிடங்களாகவோ

வெளி முகமை மூலமாகவோ அல்லது தற்காலிகப் பணியிடங்களாகவோ மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுங்கள், காலிப் பணியிடங்களை நிரப்புங்கள் என்று சங்கெடுத்து ஊதினோம். ஆனால் சென்ற அரசாங்கத்தின் காதுகளும் கண்களும் அதை கண்டுகொள்ளவேயில்லை.

வெயிலோ, மழையோ, பனியோ, புயலோ எத்தகைய இடர்ப்பாடுகளிலும் இயற்கைப் பேரிடர்களிலும் மக்கள் சேவையாற்ற அரசு ஊழியர்கள் உறுதுணையாக இருந்து வருகிறார்கள். அரசுத் துறைகளை தனியார் மயமாக்கினால் அரசு ஊழியர்கள் செய்யும் இந்த மக்கள் சேவை நிச்சயமாக தொடராது. இதன்விளைவுகள் நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத சமூகப் பிரச்னைகளை ஏற்படுத்திவிடும். அரசு நிர்வாகத்தை, ஏழை எளிய மக்களுக் குரிய பாதுகாப்புடன், மக்களின் அடிப்படைத் தேவைகள் பாதிக்காத வகையில் நிர்வகிக்க தனியார் மயங்களும், அவுட் சோர்சிங் முறைகளும், ஆட்குறைப்பு நடவடிக்கைகளும் ஒருபோதும் உதவாது.

தமிழக அரசாங்கத்தில் பல்வேறு அரசுத்துறைகளில் தொகுப்பூதியம், மதிப்பூதியம், வரையறுக்கப்படாத ஊதிய விகிதம், தினக்கூலி ஆகியவற்றின் கீழ் லட்சக்கணக்கான ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டு வேலைக்காக காத்துக்கிடக்கின்றனர். மேலும் தமிழக அரசுத்துறைகளில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் விடப்பட்டுள்ள நிலை ஒரு புறமிருக்க, படித்துவிட்டு வேலை வழங்கப்படாமல் இருக்கும் இளைஞர்களும் பெண்களும் மறுபுறம். இவற்றுக்கிடையில் இளைஞர்களையும், பெண்களையும் மிகக்குறைந்த கூலிக்கு வேலைக்கு அமர்த்தி அவர்களின் உழைப்புச் சக்தியைச் சுரண்டும் நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன. இத்தகைய கொத்தடிமை கூலி முறையின் கீழ் பல்வேறு பணிகளை செய்யக்கூடிய

ஊழியர்களின் உழைப்பு, முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப்பட்டு வருகிறது. இவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர்.

இதேபோல் மத்திய அரசின் திட்டங்களின் கீழ் மாநிலங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் நிறுவனங்களிலும் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் நிறுவனங்களிலும் முற்றிலும் ஒப்பந்த முறையில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டு குறைவான ஊதியத்தில் பணியில் அமர்த்தப்படுகின்ற போக்குகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. காலவேக மாற்றத்தில் இத்தகைய நிறுவனங்கள்/ கழகங்கள்/வாரியங்கள் தொடர்ந்து இயங்க வேண்டிய அவசியம் உள்ள நிலையில் அங்கு பணிபுரியும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு ஊழியம் செய்வதானது, அரசாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகிவிடும்.

அரசு ஊழியர்கள் போராடுகிறார்கள். ஏன் போராடுகிறார்கள்? என்று ஊடகங்களும் உண்மை நிலை உணராதவர்களும் கேள்வி கேட்கிறார்கள். அரசாங்கம் கொடுப்பதாக ஒப்புக் கொண்ட ஊதியத்தை கேட்டுத்தான் அரசு ஊழியர்கள் பேராராடுகிறார்கள். ஊதியக்குழு பரிந்துரைகளில் பரிந்துரைக்கப்பட்ட ஊதியத்தை கேட்டுத்தான் போராடுகிறார்கள். மத்திய அரசு ஊதிய மாற்ற கமிஷன் போட்டு ஒரு சம்பளத்தை நிர்ணயித்த பின்னர் அந்த சம்பளத் தையும் குறைத்து சொற்ப அளவில்தான் தருவோம் என்று மாநில அரசுகள் அடம்பிடித்தால் அரசு ஊழியர்களுக்கு போராட்டத்தைத் தவிர வேறு வழி ஏது?

தேர்தல் நேரங்களில் அரசியல் கட்சிகள் வாக்குறுதிகளை வாரி வழங்குவதும் ஆட்சிக்கு வந்தபின் அதை செயல்படுத்த முடியாமல் அவற்றை கண்டுகொள்ளாமல் இருந்துவிடுவதும் வழக்கமான ஒன்றுதான் என்பதை அரசு ஊழியர்கள் அறியாதவர்கள் அல்ல. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்தவரை ஏனோதானோவென்று வாக்குறுதிகளை அள்ளி வீசும் கட்சியாக நாங்கள் பார்க்கவில்லை. மாண்புமிகு முதல்வரே, நீங்கள், உங்களால் முடியும் என்று நம்புவதைத்தான் சொல்வீர்கள், சொன்னதைத் தவறாமல் செய்வீர்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை தமிழக அரசுத்துறைகளில் பணிபுரியும் ஒவ்வொரு அரசு ஊழியருக்கும் உள்ளது. அதனால்தான் உங்கள் வாயிலிருந்து வந்த வாக்குறுதிகளை அரசாணைகளாக எண்ணி அதை நீங்கள் சொன்னபடி நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையில் அரசு ஊழியர்கள் பொறுமையுடன் காத்திருக்கிறோம். இன்று நீங்கள் எங்கள் விருந்தாளி. உங்களை நாங்கள் சங்கடத்துக்கு ஆளாக்க இங்கு அழைக்கவில்லை.

நாங்கள் உங்களை இந்த மாநாட்டிற்கு அழைத்திருப்பதன் நோக்கம் இன்னமும் தங்கள் மீது பல லட்சம் அரசு ஊழியர்கள் நம்பிக்கையிழக்காமல் இருக்கிறோம் என்பதை உணர்த்தத்தான். நீங்கள் சொன்னதைச் செய்யும் முதல்வராகவே இருக்கிறீர்கள். அப்படியே இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். உங்கள் மீது நாங்கள் கட்டிவைத்திருக்கும் நம்பிக்கை கோட்டை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையை விடப் பெரியது.

ஒரு அரசாங்கம் தனது ஊழியர்களை சுமையென கருதுமானால் அங்கே மக்களின் திட்டங்கள் ஒருபோதும் முழுமையாக நிறைவடையாது. அதேபோல் ஒரு அரசாங்கம் அதன் ஊழியர்களை கௌரவமாக வைத்திருக்காமல் மக்களை மகிழ்ச்சியாகவும் நாட்டை முன்னேற்றப் பாதையிலும் கொண்டு செல்ல முடியாது என்பது வரலாறுகள் காலம்காலமாக கூறும் பாடம். நிதியை காரணம் காட்டி நிர்வாகத்தை முடக்கிவிடுவதைத் விட மோசமான ஆபத்து வேறொன்றுமில்லை. அரசு ஊழியர்கள் என்பவர்கள் அரசாங்கத்தின் ஆன்மா. அந்த ஆன்மாவை பொருளாதார வல்லுநர்களும், நிதியமைச்சரும் தேடிக் கண்டுபிடிக்க முடியாது. அதை அரசியல் அனுபவம் வாய்ந்த பேரறிஞர் அண்ணா , முத்தமிழ் அறிஞர் கலைஞர் போன்றவர்களின் அருகாமையில் இருந்து பாடம் பயின்ற உங்களைப் போன்றவர்களால் மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும்.

அரசு ஊழியர்களாகிய நாங்கள் எங்களுக்கு கிடைக்க வேண்டிய சட்டப்படியான உரிமைகளைத்தான் கேட்கிறோம். அதை மறுப்பதற்கான எந்த நியாயங்களும் ஏற்புடை யவையாக இருக்காது. நீங்கள் எங்கள் பிரச்னைகளை புரிந்து கொள்ளும் முதல்வர் என்பதால் அரசு ஊழியர்களின் உரிமைகளை, சலுகைகளை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவீர்கள் என்ற அசையாத நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. அரசு ஊழியர்கள் அணி திரண்டு நடத்தும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு எங்களுக்கு பெருமை சேர்த்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறோம். ●

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் உரை

# நான் திரும்பிப் பார்ப்பவனாக இருக்க மாட்டேன் உங்களில் ஒருவனாக நானும் இருப்பேன்

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (19.12.2021) சென்னையில் நடைபெற்ற, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.*

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டிற்கு தலைமையேற்றுள்ள மாநிலத் தலைவர் திரு.மு.அன்பரசு, அவர்களே!

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ். சுதர்சனம் அவர்களே! திரு. கே.பி.சங்கர் அவர்களே! எனக்கு முன்னால் உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய சி.ஐ.டி.யு. மாநிலத்

தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய தோழர் திரு. அ.சவுந்தரராசன் அவர்களே! தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. ஆ. செல்வம் அவர்களே! பொருளாளர் திரு.பாஸ்கரன் அவர்களே! உங்களோடு எப்பொழுதும், கட்சிகள் கூட்டங்கள் வைக்கிறதோ, இல்லையோ ஆனால் நீங்கள் எப்பொழுதும் கூட்டங்களை நிகழ்த்திக் கொண்டு இருக்கிறீர்கள். அதே உணர்வோடு இந்த மாநாட்டில் பங்கேற்கக்கூடிய அரசு ஊழியர்களே, ஆசிரியர் பெருமக்களே, ஊடகத் துறை சார்ந்து இருக்கக்கூடிய தொலைக்காட்சி, பத்திரிகை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் எப்போதுமே அதிகம் பேசமாட்டேன். செயலில் நம்முடைய திறமையைக் காட்டிட வேண்டும். ஒரு அடுக்குமொழி உண்டு, பேச்சைக் குறைத்து நம்முடைய திறமையை காட்டிட வேண்டும். ஆங்கிலத்திலே ஒரு வார்த்தை உண்டு. "Do or die" "செய் அல்லது செத்து மடி" ஆனால் அதைக்கூட வார்த்தையை கொஞ்சம் திருத்தம் செய்து சொல்லவேண்டும் என்று சொன்னால் என்னைப் பொருத்தவரையிலே, இந்த Do-வுக்கும் Die-க்கும் உள்ள or-என்ற வார்த்தையை நீக்கிவிட்டு Do and Die செய்து முடித்துவிட்டு தான் சாகவேண்டும் என்ற உணர்வோடு நான் என்னுடைய கடமையை ஆற்றிக் கொண்டிருக்கிறேன் என்பதை துவக்கத்திலேயே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தின் 14 ஆவது மாநில மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும்



எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள்தான் அரசாங்கம் - அரசு ஊழியர்கள் இல்லை என்றால் அரசாங்கம் இல்லை என்பதைச் சொல்வதற்காகத்தான் நான் வந்திருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கும்போது அரசு ஊழியர்களுடைய பொற்கால ஆட்சியாக எப்போதும் அமைந்திருக்கிறது என்று இங்கு உரையாற்றிய திரு.மு.அன்பரசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சவுந்திரராசன் அவர்கள் சொன்னார்கள், மற்றவர்களும் இங்கு பேசியிருக்கிறார்கள். இப்போதும் அப்படித்தான்

அமையும் என்று சொல்வதற்காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். இப்போது மட்டுமல்ல, எப்போதும். கழக ஆட்சி அமைந்தபோதெல்லாம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களது முன்னேற்றத்துக்காக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டியிருக்கிறோம் என்பதை நானும் மறக்கவில்லை, நீங்களும் மறந்திருக்க மாட்டீர்கள். உங்களுக்கெல்லாம் தெரியும். அதில் சிலருக்கு நினைவூட்டுவதற்காக சில திட்டங்களை மட்டும் தலைப்புச் செய்திகளாகச் சொல்லி உங்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

- அரசு அலுவலர்கள் நடத்தை பற்றிய ரகசியக் குறிப்பேட்டை நீக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் !
- அரசு ஊழியர் குடும்ப பாதுகாப்பு நிதி வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள்! இந்தக் கருணைக் கொடையை இந்தியாவிலேயே வழங்கிய முதல் அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் !
- அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்தால் அவரது வாரிசுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கியதும் கழக அரசுதான்!
- ஈட்டிய விடுப்பை சரண்டர் செய்து பணமாகப் பெறக்கூடிய திட்டம் அதை அமல்படுத்தியர் தலைவர் கலைஞர் அவர்கள்!
- திருமணக் கடன், வாகனக் கடன், வீடுகட்டக் கடன் ஆகியவை வழங்கியவர் கலைஞர் அவர்கள் தான்!
- மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை ஏற்படுத்தித் தந்தவரும் கலைஞர் அவர்கள் தான்.
- 6 மாதத்துக்கு ஒரு முறை ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு பஞ்சப்படி உயர்த்தும் போதெல்லாம் மாநில அரசு ஊழியர்க்கும் வழங்கியவர் தலைவர் கலைஞர்!
- ஒளிவுமறைவற்ற கலந்தாய்வு நடத்தி பணி மாறுதல்களை வழங்கியது கழக ஆட்சி காலத்தில் தான்!
- அரசுப்பணியில் சேருவதற்கான வயது வரம்பை உயர்த்தியது கழக அரசு!
- 10 ஆயிரம் சாலைப் பணியாளர்களை நியமித்ததும், 7 ஆயிரம் மக்கள் நலப்பணியாளர்களை வேலையில் அமர்த்தியதும் கழக அரசுதான்.
- பண்டிகை முன்பணத்துக்கு வட்டியை நீக்கிய அரசு கழக அரசு!
- 2 லட்சம் சத்துணவுப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கிய ஆட்சி கழக ஆட்சி!
- ஓய்வுக்காலப் பணிக்கொடை உச்சவரம்பை உயர்த்திய அரசு கழக அரசு!
- தமிழாசிரியர் பணியிடப் பாகுபாடு நீக்கப்பட்டது. புலவர் பட்டம் பி.லிட். பட்டம் ஆக்கப்பட்டது.
- நல்லாசிரியர் விருது டாக்டர் ராதாகிஷ்ணன் விருது ஆனது.
- ஒன்றிய அரசுக்கு இணையான சம்பள விகிதங்கள் மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியருக்குத் தரப்பட்டன.

இப்படி அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு கழக ஆட்சியில் வழங்கப்பட்ட சலுகைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்! கடந்த மே மாதம் ஆட்சிக்கு வந்தோம். ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள்தான் ஆகிறது. அதற்குள் ஏராளமான திட்டங்கள் அரசு ஊழியர்களுக்குச் செய்து தரப்பட்டுள்ளன.

- அரசு ஊழியர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதியை 3 லட்சம் ரூபாயில் இருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளோம்.
- அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு குறித்து நிதிநிலை அறிக்கையில் 1.4.2022 முதல் அமல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. இதுகுறித்து வரப்பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து, இந்த அரசுக்கு கடும் நெருக்கடியான நிதி சூழல் இருப்பினும் அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலனை கருத்தில் கொண்டு அறிவிக்கப்பட்ட நாளுக்கு மூன்று மாத காலம் முன்னதாகவே அதாவது 1.1.2022

முதல் அகவிலைப்படி உயர்வு அமல்படுத்தப்படும் என்பதை அறிவித்த ஆட்சி தான் இந்த ஆட்சி. இதன் மூலம் 16 லட்சம் அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

- சத்துணவு மையங்களில் பணிபுரியும் சத்துணவு சமையலர் மற்றும் சமையல்

உதவியாளர்கள் ஆகியோரின் ஓய்வு பெறக்கூடிய வயது 58 லிருந்து 60 ஆக உயர்த்திய ஆட்சிதான் இந்த திமுக ஆட்சி. இதன்மூலம் தற்போது பணியில் இருக்கக்கூடிய 29 ஆயிரத்து 137 சமையலர்களும் 24 ஆயிரத்து 576 சமையல் உதவியாளர்களும் பயன்பெற்றுள்ளார்கள்.

- அரசுப் பணியாளர்கள் தங்கள் பணிக் காலத்தில் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதிய உயர்வு 2020-ஆம் ஆண்டு கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் ரத்து செய்யப்பட்டது. அரசுப் பணியாளர்கள் பெற்றிடும் கூடுதல் கல்வித்தகுதி மூலம் அவர்களுடைய பணித்திறன் மற்றும் அவர்களின் செயல்பாடுகள் மேலும் மேம்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு உயர்கல்விக்கான ஊக்கத்தொகை ஒன்றிய அரசால் அறிவித்துள்ள வழிகாட்டுதலின்படி அந்த அடிப்படையில் விரைவில் அறிவிக்கப்படும் என்று அறிவித்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி!

- அரசு பள்ளிகளில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர்கள் பணி தேவைக்கேற்ப தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாக நிரப்புவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கும் ஆட்சி இந்த ஆட்சி.

- ஓய்வு பெறும் நாளில் அரசுப் பணியாளர்களைத் தற்காலிகப் பணி நீக்கும் நடைமுறை தவிர்க்கப்படும் என்று அறிவித்த ஆட்சி இந்த ஆட்சி.

- கடந்த 2016, 2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் முந்தைய அதிமுக அரசுக்கு எதிராக அரசு ஊழியர்கள் ஏராளமான போராட்டங்களை நடத்தினீர்கள். அப்போது பல்வேறு நடவடிக்கைகளுக்கு நீங்கள் ஆளாக்கப்பட்டீர்கள்.

  - இந்த வேலை நிறுத்தக் காலம் மற்றும் தற்காலிகப் பணி நீக்க காலத்தை பணிக்காலமாக முறைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தீர்கள். இதனைப் பரிவுடன் பரிசீலித்து பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தக் காலம் மற்றும் தற்காலிக பணிநீக்க காலம் ஆகியவற்றைப் பணிக்காலமாக முறைப்படுத்திய ஆட்சிதான் இந்த ஆட்சி!

- பணியில் இருக்கும்போது காலமான அரசுப்பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் அரசுப்பணி பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை நீக்கக்கூடிய வகையில் கருணை அடிப்படையிலான நியமனங்கள் குறித்து தற்போது நடைமுறையில் உள்ள தெளிவின்மையை சரிசெய்யும் வகையில் உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடத் தயாராகி வரும் ஆட்சிதான் திமுக ஆட்சி!

- வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது பணியிட மாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை அதே இடத்தில் மீண்டும் பணியமர்த்தும் வகையில் கலந்தாய்வின்போது அவர்களுக்கு உரிய முன்னுரிமை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கும் ஆட்சிதான் இந்த ஆட்சி. போராட்டக் காலத்தில் அவர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் நிச்சயமாக, உறுதியாக கைவிடப்படும். அந்த ஒழுங்கு நடவடிக்கையின் காரணமாகப் பதவி உயர்வு ஏதேனும் பாதிக்கப்பட்டிருந்தால் அதுவும் சரி செய்யப்படும் என்று அறிவித்திருக்கும் ஆட்சிதான் இந்த ஆட்சி!

- அரசுப் பணியாளர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களைச் சார்ந்து வாழக்கூடிய மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோர்களின் வயதுவரம்பைக் கருத்தில் கொள்ளாமல் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று அறிவித்திருக்கும் ஆட்சிதான் இந்த ஆட்சி.

- கொரோனா சிகிச்சைகளை பொருத்தவரையில் அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள சிகிச்சை தொடர்பான 10 லட்சம் ரூபாயைவிடக் கூடுதலாகக் கொரோனா சிகிச்சைக்கான செலவுத் தொகை அரசு நிதி உதவியின் கீழ் அனுமதிக்கப்படும் என்று அறிவித்த ஆட்சி தான் இந்த ஆட்சி!
- கணக்கு மற்றும் கருவூலத் துறையின் பணிகளை எளிதாக மேற்கொள்ளும் பொருட்டு அவை துரிதமாகவும் எளிதாகவும் செய்யக்கூடிய வகையில் மாவட்டம்தோறும் பயிற்சியாளர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படும் என்று அறிவித்த ஆட்சிதான் இந்த ஆட்சி!
- புதியதாக அரசுப் பணிகளில் சேரும் அரசுப் பணியாளர்கள் மற்றும் பதவி உயர்வு பெறும் பணியாளர்களுக்கு பணி தொடர்பான பயிற்சியினை அந்தந்த மாவட்டங்களிலேயே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முயற்சி செய்து வரும் ஆட்சிதான் இந்த ஆட்சி! இதன் மூலம் பவானி சாகர் சென்று பயிற்சி பெறும் நிலை தவிர்க்கப்பட்டு தாமதமின்றி அரசு ஊழியர்கள் உரிய காலத்தில் தங்களுக்குரிய தகுதிக்கான பருவம் முடித்தல் மற்றும் பதவி உயர்வு பெறுவது உறுதி செய்யப்படும்.
- அரசுப்பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்துள்ள காரணத்தால், ஆசிரியர் மாணவர்கள் விகிதாச்சார தேவைக்கேற்ப ஆசிரியர் பணி நியமனம் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த ஆட்சிதான் இந்த ஆட்சி!

மக்களாட்சித் தத்துவத்தில் நான்கு தூண்களில் ஒன்றான நிர்வாகத்தின் அடித்தளமாக விளங்கக்கூடிய அரசு ஊழியர்களின் நலனில் எப்போதுமே அக்கறை கொண்டு அவர்களின் நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு நிச்சயமாக படிப்படியாக ஆனால் அதே நேரத்தில் உறுதியாக நிறைவேற்றறப்படும் என்று நான் தமிழ்நாடு சட்டமன்றத்திலேயே அறிவித்திருக்கிறேன்.

அந்த உரிமையுடனும் தகுதியுடனும்தான் நான் இந்த மாநாட்டுக்கு வருகை தந்துள்ளேன்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவராக இருக்கும் அன்புக்குரிய சகோதரர் மு.அன்பரசு அவர்கள் சில நாட்களுக்கு முன் 'தீக்கதிர்' நாளேட்டில் ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார். அதையும் படித்துப் பார்த்தேன். அதில் அவர் சொல்கிறார்.

**'ஒற்றைக் கோரிக்கை மாநாடு! வெற்றி காண கூடுவோம் உறுதியோடு!"**

என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் மிக நீண்ட கட்டுரையை எழுதி இருக்கிறார்கள். மிக நீண்ட கட்டுரையாக எழுதியிருந்தார். நானும் முழுமையாகப் படித்துப் பார்த்தேன். தன்னுடைய கோரிக்கைகள் அனைத்தையும் விரிவாக எழுதிய அன்பரசு அவர்கள்,

**"அரசிடம் கோரிக்கை வைப்போம்! ஆட்சியாளர்களைத் திரும்பிப் பார்க்க வைப்போம்!"** என்று முடித்திருக்கிறார்.

நான் திரும்பிப் பார்ப்பவனாக இருக்க மாட்டேன் - உங்களில் ஒருவனாக நானும் இருப்பேன். அதை உங்களுக்கு உணர்த்துவதற்காகத்தான் நான் இந்த மாநாட்டிற்கு தேடி வந்திருக்கிறேன். நீங்கள் அரசு ஊழியர்கள். நான் மக்கள் ஊழியன். அதுதான் வித்தியாசம். எனவே, உங்கள் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை நான் உணர்கிறேன், ஏற்றுக்கொள்கிறேன்.

அரசாங்கம் இப்போது உள்ள நிலைமையை நீங்கள் உணர்ந்தாக வேண்டும், ஏற்றுக்கொண்டாக வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஐந்து லட்சம் கோடிக் கடனில் இருக்கிறோம்.

கடந்த பத்தாண்டுகாலமாகத் தமிழ்நாட்டின் நிதி நிர்வாகத்தைச் சீரழித்தும் - சூறையாடியதுமான ஒரு ஆட்சி நடந்தது. நான் அரசியல் பேச விரும்பவில்லை . இருக்கக்கூடிய எதார்த்தைத்தான் சொல்கிறேன். அதை நான் உங்களிடம்தான் கூற முடியும். வேறு யாரிடமும் கூறமுடியாது. இந்தக் கடந்த காலத் தவறுகளில் இருந்து தமிழ்நாட்டை மீட்டெடுக்கும் பணியை

நாங்கள் தொடங்கி இருக்கிறோம்.

- நிதிநிலைமையைச் சரி செய்தாக வேண்டும்.
- 5 லட்சம் கோடிக் கடன்களை அடைத்தாக வேண்டும்.
- புதிய தொழில்களை, தொழில் நிறுவனங்களை அழைத்து வருவதன் மூலமாக வளர்ச்சியை உருவாக்க முனைந்து வருகிறோம். அதற்கான கொள்கை அறிவிப்புகளைச் செய்துள்ளோம்.
- புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை ஈடுபட்டிருக்கிறோம்.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக கொரோனா என்ற கொடிய தொற்று நோய், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை அதிகமாகப் பாதித்துவிட்டது. அந்தத் தொழில்களை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவரப் போராடி வருகிறோம். இத்தகைய முன்னெடுப்புகளின் மூலமாகத்தான் தமிழகத்தை மீண்டும் தலைநிமிர வைக்க முடியும் என்ற உணர்வோடு உழைத்து வருகிறோம். இவை அனைத்தும் உங்களுக்குப் புதிய செய்திகள் அல்ல. உங்களுக்குத் தெரிந்த செய்திகள்தான். தமிழ்நாட்டின் நிதி நிலைமை விரைவில் சீராகும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக, உறுதியாக இருக்கிறது.

அப்போது உங்களது அனைத்துக் கோரிக்கைகளையும் நீங்கள் கேட்காமலேயே, இது போன்ற மாநாடுகளையெல்லாம் போட்டு என்னை அழைத்து வந்து இந்த உறுதியை கேட்காமேலேயே அந்த கோரிக்கையை நிச்சயமாக இந்த அரசு நிறைவேற்றித் தரும். ஆகவே நான் இருக்கிறேன், நீங்கள் இதைப்பற்றி சிறிதளவும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள், ஒன்று சொன்னார். "பெட்டி இருக்கிறது, பூட்டு இருக்கிறது, சாவி இருக்கிறது, ஆனால் பெட்டி காலியாக இருக்கிறது" என்று சொன்னார்கள். அரசாங்கத்தின் கஜானாவை நாம் அனைவரும் சேர்ந்து நிரப்பியாக வேண்டும். அரசாங்க கஜானாவுக்கு வர வேண்டியதில் மிக முக்கியமானது சரக்கு மற்றும் சேவை வரி. அதனை மொத்தமாக ஒன்றிய அரசு பறித்துவிட்டது. அவர்கள் எடுத்துச் சென்று விட்டார்கள். 'கொத்தடிமை போன்ற நிலை அகலட்டும்' என்று அன்பரசு அவர்கள் எழுதி இருக்கிறார்கள்.

நிதி நிலைமையைப் பொறுத்தவரை ஒன்றிய அரசிடம் கொத்தடிமை

முறையைப் போலக் கையேந்தும் நிலைமையில்தான் மாநிலங்கள் இருக்கின்றன.

ஜி.எஸ்.டி., முதல் வெள்ள நிவாரண நிதி வரைக்கும் நமக்குத் தரவேண்டிய நிதிகளே முழுமையாகத் தரப்படுவது இல்லை.

தரப்படும் நிதியும் உரிய நேரத்தில் வழங்கப்படுவது இல்லை .

அரசு ஊழியர் சங்கமாக மட்டுமில்லை நீங்கள், அரசியல் தெளிவு பெற்றவர்கள் நிரம்பிய சங்கமாகவும் இருக்கிற காரணத்தால் நான் இதற்கு மேல் பவசியமே கிடையாது.

“அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல் இல்லாகித் தோன்றக் கெடும்” என்கிறார் வள்ளுவர்.

இருப்பது, இயற்றக் கூடியது, இனியும் ஈட்டக் கூடியது ஆகியவற்றின் அளவு அறிந்து, செயல் திட்டங்களை வகுத்துக் கொள்ளாவிட்டால், வலிமையோ அல்லது வளமோ இருப்பதுபோலத் தோன்றினாலும் கூட இல்லாமல் மறைந்து போய்விடும் என்கிறார் வள்ளுவர்.

அளவு அறிந்து இந்த அரசு செயல்படுகிறது. ஈட்டுதல் அதிகமானதும் கொடுத்தல் அதிகம் ஆகும். நிச்சயம் அதிகரித்து வழங்கப்படும்.

மக்களுக்குக் கொடுப்பதற்காகத்தான் இந்த அரசு இருக்கிறது என்பதைச் மீண்டும் உங்களிடத்திலே சொல்லி இந்த மாநாட்டிலே பங்கேற்று உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கக்கூடிய இந்த மாநாட்டு குழுவினருக்கும், இங்கே வீற்றிருக்கக்கூடிய அத்தனைப் பேருக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன். ●

**மறுக்கபடும் உரிமைகள், பறிக்கப்படும் சலுகைகள், எதிர்கொள்ளும் சவால்கள்**

# பாம்பின் தலையில் அடிப்போம்

- சுவாமிநாதன்

வெறும் வாய் வார்த்தைகளால் மட்டும் வெற்றியை உறுதி செய்து விட முடியாது; கரங்கள் உயரும் போதுதான் கை விலங்குகள் முறியும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆவது மாநாட்டில் அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் தென் மண்டல துணைத் தலைவர் க.சுவாமிநாதன் கூறினார். “மறுக்கப்படும் உரிமைகள் பறிக்கப்படும் சலுகைகள்,




எதிர்கொள்ளும் சவால்கள்” என்ற தலைப்பில் அவர் பேசியதாவது: 1970க்கு பிறகு பலநாடுகளிலும், 1990ஆம் ஆண்டிற்கு பிறகு உலகம் முழுவதும் அமலாக்கப்பட்ட நவீன தாராளமய பாதைக்கும் உரிமை மறுப்புக்கும், பணப்பலன்கள் பறிப்பிற்கும் உள்ள தொடர்பை புரிந்துகொள்ள வேண்டும். பொருளாதாரத்தில் இருந்து அரசு விலகிக் கொள்வது என்பதுதான் நவீன தாராளமயத்தின் முக்கிய அம்சம். எனவேதான் அரசு வங்கிகள், இன்சூரன்ஸ் நடத்த வேண்டியதில்லை; சாலைகள் அமைக்க வேண்டியதில்லை என பலராலும் கூறப்பட்டு வருகிறது. அரசு ஊழியர்கள் பணப்பலன்களை பெறுகிறார்கள் என்றால், அதை மற்ற தனியார் தொழிற்சாலைகளும் வழங்க வேண்டியது கட்டாயம். எனவே அரசு இதுபோன்ற பணிகளில் இருந்து விலகிக் கொண்டால், தனியார் நிறுவனங்கள் பணப்பலன்களை வழங்க வேண்டி யதில்லை என்ற நிலை ஏற்படும். புதிய ஓய்வூதிய திட்டமானது, ஓய்வூதிய திட்டத்தின் நோக்க த்தையே சீர்குலைப்பதாக உள்ளது. எனவேதான் புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிடு என்பது மிக முக்கியமான கோரிக்கையாக முன் வைக்கப்படுகிறது. பழைய ஓய்வூதிய திட்டம் என்பது பயன்கள் வரை யறுக்கப்பட்ட திட்டம். ஒரு ஊழியர் பணி ஓய்வு பெற்றால் அவரது கடைசி ஊதியத்தில் 50 விழுக்காடு அடிப்படை ஓய்வூதியமாக மாற்றப் படும் என்ற உத்தரவாதம் இருந்தது. ஆனால் நவீன தாராளமயம் வந்த பிறகு அரசு ஊழியர்களுக்கு மட்டு மல்ல, வங்கி, இன்சூரன்ஸ் ஊழியர்கள் என அனைத்து தரப்பினருக்கும் பங்களிப்பு திட்டம் மட்டுமே வரையறுக்கப்படும். இந்த புதிய திட்டத்தின் வேர்கள் எங்கிருந்து வந்தது என்றால் அது இந்திய எல்லைகளையும் கடந்து வந்தது என்பதை புரிந்துகொண்டு அதற்கு எதிர்வினையாற்ற வேண்டியுள்ளது. உலகத்தினுடைய முதல் 500 நிறுவனங்கள் (பார்ச்சூன் 500) பணப்பயன்கள் ஓய்வூதிய திட்டத்தில் இருந்து மாறி பங்களிப்பு ஓய்வூதியத்தை நோக்கி நகர்ந்தன. 500 நிறு வனங்களில் 350 நிறுவனங்கள் அதை அமல்படுத்திய

பிறகு, அவர்களுக்குள் ஒரு கேள்வி எழுந்தது, உலகம் முழுவதும் பழைய ஓய்வூதிய திட்ட பலன்களை பெறும்போது, தனியார் தொழிற்சாலைகளில் மட்டும் புதிய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தி னால், தனியார் தொழிற்சாலை ஊழியர்களும் பழைய ஓய்வூதிய திட்ட பலன்களை கேட்பார்கள், போராடுவார்கள் என்பதால்தான், உலகம் முழுக்க அனைத்து துறை களிலும் புதிய ஓய்வூதிய திட்டம் அமல்படுத்தப்பட்டது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

#### சூதாட்ட மேசைகள்

பொருளாதார நிபுணர் ஒருவர் சுருக்கமாக உலக பொருளாதாரச் சூழலை கூறுகையில், உலகம் முழுவதும் சூதாட்ட மேசைகள் பரப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுதான் உலக நிதிச்சூழல் என்பது அவரின் கூற்று. உலகம் முழுக்க சர்வதேச நிதி மூலதனம் சூதாட்டக்களமாக மாற்றப்பட்டுள்ள சூழலில்தான், இந்த புதிய ஓய்வூதிய திட்டம் என்ற தாக்குதல் நம்மீது தொடுக்கப்பட்டுள்ளது.

நிதி மூலதன சூதாட்டத்திற்கு ஆட்கள் குறைந்தால் அங்கே அரசு ஊழியர்களை, வங்கி ஊழியர்களை, இன்சூரன்ஸ் ஊழியர்களை அமர்த்த வேண்டியுள்ளது. இதன் காரண மாகத்தான் உலகம் முழுவதும் ஓய்வூதிய நிதியங்கள் தங்களுடைய சேமிப்புகளை எல்லாம் இதுபோன்ற சூதாட்ட நிறுவனங்களை நோக்கி திருப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எனவேதான் ‘பலன்கள் ஓய்வூதிய திட்டத்தில்’ இருந்து ‘பங்களிப்பு ஓய்வூதிய திட்டமாக’ மாற்றப்பட்டது. புதிய தேசிய ஓய்வூதிய திட்டத்தின் முன்னுரையில் ஓய்வூதியம், ஓய்வூதியத் தொகை உத்தரவாதப்படுத்தப்படாது என்று மட்டும் கூறவில்லை; ஓய்வூதி யத்திற்காக போடப்படும் முதலீடு களுக்கும் உத்தரவாதம் கிடையாது என்று கூறப்பட்டிருக்கும். இந்தியா வில் இன்னும் அது தன்னுடைய முழு உருவத்தை காட்டவில்லை. தற்போது பணி ஓய்வுபெற்ற பிறகு வழங்கப்பட வேண்டிய பணப்பலன்களே வழங்கப்படுவதில்லை என்ற சூழல் உருவாகியுள்ளது. கூட்டுறவு வங்கிகளில் 14 விழுக்காடு வட்டி வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போது 6.4 விழுக்காடாக வட்டி குறைக்கப்பட்டுவிட்டது. இதே நிலைதான் அனைத்து வங்கிகளி லும்.

#### நிரந்தரத் தீர்வை நோக்கி...

புதிய ஓய்வூதிய திட்டம் ரத்து குறித்து கோரிக்கை வைக்கும் போதே, இந்த உலக நிதி மூலதனச் சூழலை புரிந்து கொண்டு, நாம் சந்திக்க வேண்டிய எதிரி எவ்வளவு மிகப்பெரிய எதிரி என்பதை புரிந்து கொண்டு அதற்கேற்ப வியூகம் அமைக்க வேண்டியுள்ளது. பாம்பை அதன் முதுகில், வாலில் அடிக்கும் போது பாம்பு பலவீனப்படும். பாம்பு பலவீனப்பட்டு நகராமல் இருந்தால் கூட அதன் தலையில் அடித்தால்தான் அது இறந்து போகும் என்பது நமக்கு தெரியும். அதுபோல்தான் துறைவாரியான போராட்டங்கள் முக்கியம் என்றா லும், அது பாம்பின் முதுகிலும், வாலிலும் விழுகின்ற அடிகளாக இருக்கும் பாம்பை பலவீனப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வரும் பிப்ரவரி மாதம் 23, 24ஆம் தேதி நடை பெறும் போராட்டம்தான் நீங்கள் பாம்பின் தலையிலே அடிக்கக் கூடிய அடி என்பதை மறந்து விடக்கூடாது. எனவே ஒரு நிரந்தர தீர்வை நோக்கி நகர்வதற்கான விரிந்த இயக்கத்தை நோக்கி நகர வேண்டும். வெறும் வாய் வார்த்தைகளால் மட்டும் வெற்றியை உறுதி செய்து விட முடியாது. கரங்கள் உயரும் போதுதான் கை விலங்குகள் முறியும். இந்திய நாட்டினுடைய உழைப்பாளி மக்களின் கோடிக்கணக்கான கரங்கள் பிப்ரவரி 23, 24இல் உயர்ந்து நிற்கும் போது, அதில் அரசு ஊழியர்களின் கரங்களும் ஓங்கி நிற்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

●

### பேசுவது பெண் உரிமை! பேணுவதோ பெண் அடிமை!

# ‘அமர்த்து – துரத்து’ கொடுமைக்கு அதிகம் இலக்காவது பெண்கள்தான்!

**- தீபா**

‘அமர்த்து - துரத்து’ (ஹையர் அண்ட் பையர்) என்கிற கொடுமைக்கு முதலில் இலக்காவது பெண்களாகத்தான் இருக்கிறார்கள் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆவது மாநாட்டில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் மாநிலப் பொருளாளர் முனைவர் தீபா தெரிவித்தார். “பேசுவது பெண் உரிமை, பேணுவதோ பெண் அடிமை” என்ற தலைப்பில் அவர் பேசியதாவது: வீட்டில் இருக்கும் பெண்கள் எவ்வளவு வேலை செய்திருந்தாலும் ‘சும்மா’ இருப்பதாகத்தான் பொதுவெளியில் பெரும்பாலான ஆண்களால் கூறப்படுகிறது. வீடு பணியிடமாக அங்கீகரிக்கப்படுவதில்லை. வீட்டு வேலைக்கு மதிப்பு கணக்கீடு செய்யப்பட வேண்டும் என பல பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். ஆப்பிரிக்கா, இந்தியா




உள்ளிட்ட வளர்ந்து வரும் நாடுகளில் வீட்டு வேலை செய்யும் பெண்கள் மூன்று நாட்கள் வேலை நிறுத்தம் செய்தால் நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தியும் சீர் குலைந்துவிடும் என்று ஆய்வு கூறுகிறது.

இந்தியாவில் பெண்கள் வேலைவாய்ப்பு விகிதம் 2005க்கு பிறகு குறைந்து விட்டதாக ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. உலகம் முழுவதும் பெண்கள் உழைப்பு, பெண்களின் பங்கேற்பு அதிகரித்து வரும் சூழலில். இந்தியாவில் மட்டும் பெண் உழைப்பு வாய்ப்பு குறைந்தது எப்படி என்று ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. அமைப்பு சாரா தொழிலாளியாகவே பெரும்பாலான பெண்கள் பணியாற்றி வருகின்றனர். பெண்களின் உழைப்பு வீடு சார்ந்து அதிகமாக இருப்பதால், அவற்றின் அங்கீகாரம் குறைந்தே காணப்படுகிறது. சமூக வெளியில் பெண்களுக்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கிறது. பல இன்னல்களுக்கு பிறகு பெண்கள் வேலைக்கு வரும்போது அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் ஏராளம். பணி பாதுகாப்பு இன்மை என்பது பெண்களுக்கு மிகப்பெரும் பிரச்சனையாகவே இருக்கிறது. ‘அமர்த்து - துரத்து’ என்கிற இலக்கிற்கு முதலில் உள்ளாவது பெண்களாகத்தான் இருக்கிறார்கள். பருவம் எய்தும் முன்பே திருமணம் செய்து வைக்கும் வழக்கம் இங்கு இருந்தது. நீண்ட போராட்டத்திற்கு பிறகு அது 10 வயதில் இருந்து 12ஆக உயர்த்தப்பட்டது.

1947இல்தான் பெண்களின் திருமண வயது 18ஆக மாற்றப்பட்டது. தற்போது அது 21ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பெண்ணின் திருமண வயது 21 ஆக உயர்த்தப்பட்டதை பலர் கொண்டாடி வருகின்றனர். ஆனால் உண்மையில் இந்த வயது உயர்வு என்பது மேலும் சாதியக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதற்கான ஏற்பாடு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். குழந்தை திருமணத்தை எப்படி எதிர்த்தோமோ, அதேபோல் சாதிய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நினைக்கும் இதுபோன்ற சில ஏற்பாடுகளையும் நாம் எதிர்க்க வேண்டும். வருங்கால வரலாற்றை எழுதுபவர்களாக பெண்கள் உருவாக வேண்டும். பெண்களுக்கான சமவாய்ப்பை உருவாக்க வேண்டும். குடும்பம், தொழிற்சங்கம், அரசியல், தத்துவம் உள்ளிட்ட அரசியல் செயல்பாடு முக்கியமாகக் கருதப்படுகிறது. பெண்கள் சங்கத்தில் இணைந்து போராடிய அனைத்து போராட்டங்களும் வெற்றி பெற்றுள்ளதை கடந்தகால படிப்பினை நமக்கு உணர்த்தியுள்ளது. ஆகவே புதிய மாற்றங்கள் என்பது நம்மில் இருந்து துவங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். ●

கட்டுரை

# அமைப்பாய் திரள்வோம் பொது எதிரியை வீழ்த்துவோம்

- தெ. வாசுகி

ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டிருந்த காலத்தில் நமது இந்திய திருநாட்டில் இனம், மதம், மொழியால் மக்கள் வேறுபட்டிருந்தாலும் நம் அனைவரையும் ஒன்றிணைத்து விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்டது ஆங்கிலேயர் என்ற ஒரு பொது எதிரியை எதிர்த்துதான்.

ஏகாதிபத்தியம் எப்போதும் தனது லாப வேட்கைக்காக தனது ஆதிக்க யுத்ததை தொடர்ந்து நடத்திக் கொண்டேயிருக்கிறது. ஏகாதிபத்திய யுத்தம் இரண்டு அம்சங்களை வலியுறுத்துகிறது. லாபத்துக்காக மற்றவர்களை சுரண்டுவதற்கும் ஒவ்வொரு நாட்டின் முதலாளிகளும் பாடுபடுதல் மற்றும் வல்லரசுகள் உலகத்தை கூறுபோடுவதற்கும் பலவீனமான நாடுகளை அடிமைப்படுத்துவதற்கும் பாடுபடுகிறது. ஒருநாட்டின் இயற்கை வளங்களையும், மனித வளங்களையும் அந்நிய முதலாளிகளுக்கு தாரைவார்க்கும் தொழில் கொள்கையை மாற்றியமைத்து முதலாளித்துவத்தின் சுரண்டலில் பல நாடுகள் பலியாகிக் கொண்டிருக்கிறது.

தொழிலாளிகளை ஏமாற்றுவதன் மூலமே முதலாளிகள் கொழுத்த லாபம் பெறுகிறார்கள். இதில் பெண் தொழிலாளர்கள் அதீத உழைப்புச்சுரண்டலுக்கு ஆளாகிரார்கள். முதலாளித்துவத்தில் பெண்களை பணியில் சேர்ப்பதன் மூலம் அவர்களை குறைந்த ஊதியத்தில் நியமிக்கலாம் என்பதும் அமைப்பாக திரளவிடாமல் எவ்வித எதிர்ப்புகளின்றி அவர்களது உழைப்பை சுரண்டலாம் என்பதும் தான் முக்கிய நோக்கமாக உள்ளது. இத்தகைய பெரும் முதலாளிகளையும் அவர்கள் கட்டளைக்கு ஏற்ப ஆடும் ஆட்சியாளர்களையும் அடையாளம் காணவேண்டியது அவசியமாகிறது.

சமீபத்தில் பன்னாட்டு பெரு நிறுவனமான அமேசான் தனது சரக்கு சேவையைத்தான் பயன்படுத்த வேண்டுமென்று சில்லறை வணிகர்களை கட்டாயப்படுத்தியதற்hகாக இத்தாலியிலுள்ள ''போட்டி மற்றும் சந்தை ஒழுங்குபடுத்தும் அமைப்பு'' அமேசான் நிறுவனத்துக்கு ஐரோப்பிய நாடுகளில் இதுவரை இல்லாத அளவுக்கு 128 கோடி டாலர் அபராதம் விதித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் இத்தகைய பன்னாட்டு நிறுவனங்களுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்படுகிறது. இந்தியாவின் இயற்கை வளங்களையும் மனித வளங்களையும் சுரண்டுவதற்காகவே பன்னாட்டு முதலாளிகளை ஈர்க்கும் முகமாக பெரும் முதலாளிகளுக்கு ஆதரவாக தொழிலாளர் நலச்சட்டங்களை திருத்துவதும், சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டத்தை திருத்துவதும், வேளாண்சட்டங்களை திருத்துவதும் என ஒன்றிய பஜக அரசு முதலாளித்துவத்தின் லாபவேட்டைக் காடாக இந்தியாவை மாற்றிக்கொண்டிருக்கிறது.

ஆகையால் பன்னாட்டு பெரு நிறுவனங்கள் இதுநாள் வரை சட்ட விரோதமாக மறுத்து வந்த தொழிலாளர்கள் உரிமைகள் அனைத்தையும் ஒன்றிய பஜக அரசு சட்டபூர்வமாக செய்திட வழிவகுத்துள்ளது. சுதந்திர இந்தியாவில் தொழிலாளர் சட்டத்தை முதன்முறையாக முற்றிலுமாக பெருநிறுவனங்களின் லாபவேட்கைக்காக அவற்றிற்கு சாதகமாக மாற்றி சட்டம் இயற்றப்பட்டுள்ளது. ஒப்பந்தகால வேலைவாய்ப்பு (குஒநன கூநசஅ நுஅயீடடிலஅநவே குகூநு), பயிற்சியாளர் ஊக்குவிப்பு (சூயவiடியேட நுஅயீடடிலயbடைவைல நுnhயnஉநஅநவே அளைளiடிn சூநுநுஆ) போன்ற புதிய பெயர்களில் கடுமையான உழைப்பு சுரண்டலுக்கான சட்டங்களை ஒன்றிய பாஜக அரசு இயற்றியுள்ளது. இதனால் எதிர்வரும் காலங்களில் தொழிலாளர்களின் ஊதியம், உரிமைகள் அனைத்தும் கடுமையாக பாதிக்கப்படும்.

விளைச்சலுக்கு ஏற்ற நியாயமான விலை கிடைக்காததற்கு கார்ப்பரேட் பெருநிறுவனங்களின் சுரண்டல்தான் காரணம் என்பதையும், இந்த கார்ப்பரேட்டுகளுக்கு சாதகமாக சுரண்டலை சட்டபூர்வமாக்குவதற்காகவே விவசாய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன என்பதையும், கார்ப்பரேட் நிறுவனங்கள் தான் நமக்கு பொது எதிரி என்று அடையாளம் கண்டுகொண்ட விவசாயிகள் ஒற்றுமையாக உறுதியாக போராடியதால்தான் ஒன்றிய பாஜக அரசின் சூழ்ச்சிகளை முறியடித்து விவசாயிகள் போராட்டம் வரலாற்று சிறப்புமிக்க வெற்றியில் முடிந்தது.

இந்தியா முழுமைக்கும் அரசு துறைகளில் வெளிமுகமை மூலமாக அமர்த்து துரத்து என்ற நிலையில் ஒப்பந்த ஊதியம் அடிப்படையில் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள். அனைத்து மாநிலங்களிலும் உள்ள அரசு துறைகளில் பலலட்சம் காலி பணியடங்களை நிரப்பாமல் படித்து வேலைக்காக காத்திருக்கும் நம்நாட்டு இளைஞர்கள் பன்னாட்டு நிறுவனங்களின் கொத்தடிமைகளாக பணியமர்த்தப்படுகிறார்கள். சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியாவில்தான் மனிதவளம் அதிகாக உள்ளது. இதனை இந்தியாவின் வளர்ச்சிக்கு பயன்படுத்தும் திட்டம் ஏதும் வகுக்காமல் பன்னாட்டு நிறுவனங்களின் லாபவெறிக்கு இளைஞர்களின் வாழ்வை இறையாக்கிட துடிக்கும் ஏகாதிபத்தியமும் அதற்கு துணையாக நிற்கும் ஆட்சியாளர்களை அடையாளம் கண்டு விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், உழைக்கும் பெண்கள், பொதுமக்கள் என அனைவரும் அமைப்பாய் திறள்வது கட்டாயமாகிறது. நம்நாட்டில் கார்ப்பரேட்டுகளுக்கு எதிராக, ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இன்னொரு சுதந்திரப்போர் நடந்துக்கொண்டிருக்கிறது. பொது எதிரியை அடையாளம் கண்டுகொண்டோம். உழைக்கும் வர்க்கமும் பொதுமக்களும் கரம்கோர்த்து அமைப்பாய் திரள்வோம் நம்பொது எதிரியை வீழ்த்துவோம்.●

## 14 ஆம் மாநில மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகள் விவர தொகுப்பு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பிரதிநிதி படிவம் பூர்த்தி செய்து கொடுத்தவர்கள் | ஆண் | 426 | பெண் | 158 | | |
| வயது | 18 முதல் 25 வரை | 3 | 26 முதல் 35 வரை | 56 | 36 முதல் 45 வரை | 152 |
| | 46 முதல் 55 வரை | 258 | 56 முதல் 60 வரை | 115 | | |
| கல்வித்தகுதி | இறுதி வகுப்புவரை | 142 | +2 வரை | 94 | பட்டப்படிப்பு | 176 |
| | பட்டயப்படிப்பு | 46 | தொழில்நுட்பம் (ITI) | 24 | பட்ட மேல்படிப்பு | 102 |
| அரசு ஊழியர் சங்கத்தின் பொறுப்பு | மாநிலம் | 16 | மாவட்டம் | 284 | வட்டக்கிளை | 242 |
| துறைவாரி சங்கத்தின் பொறுப்பு | மாநிலம் | 160 | மாவட்டம் | 239 | வட்டக்கிளை | 56 |
| | ஒன்றியம் | 42 | | | | |
| சங்க நடவடிக்கையில் ஈடுபட்டதால் பணி நீக்கம் செய்யப்பட்ட காலம் | இல்லை | 452 | 1-25 மாதம் | 115 | 25க்கு மாதத்திற்கு மேல் | 17 |
| சிறை சென்ற காலம் எத்தனை நாள் | இல்லை | 363 | 1-25 நாட்கள் | 201 | 26- 50 நாட்கள் | 15 |
| | 50 க்கு நாட்களுக்கு மேல் | 5 | | | | |
| மறியலில் கலந்து கொண்ட அனுபவம் உண்டா | ஆம் | 560 | இல்லை | 24 | | |
| அரசு ஊழியர் சந்தாதார் | ஆம் | 571 | இல்லை | 13 | | |
| எம்ப்ளாயீஸ் பேரம் சந்தாதார் | ஆம் | 332 | இல்லை | 252 | | |
| தானங்கள் | இரத்த தானம் | 254 | உறுப்புதானம் | 9 | உடல்தானம் | 12 |
| | கண்தானம் | 56 | | | | |
| பணியின் தன்மை | காலமுறை ஊதியம் | 441 | சிறப்பு காலமுறை ஊதியம் | 125 | மதிபபூதியம் | 8 |
| | தொகுப்பூதியம் | 10 | | | | |
| எந்த ஓய்வூதிய திட்டம் | பழையது | 249 | புதியது | 192 | சிறப்பு | 125 |
| கொரோனா தொற்றை எதிர்கொண்டவரா? | ஆம் | 153 | இல்லை | 431 | | |
| கொரோனா தொற்றால் குடும்பத்தில் யாரேனும் பாதிக்கப்படடனாரா? | ஆம் | 131 | இல்லை | 453 | | |
| கொரோனா தடுப்பு ஊசி செலுத்தியவர்கள் | தடுப்பூசி 1 | 56 | தடுப்பூசி 2 | 516 | இல்லை | 12 |
| பிரதிநிதிகளில் வயதில் இளையவர் தோழர்.பூங்குழலி (வயது 22),மயிலாடுதுறை.<br>பிரதிநிதிகளில் வயதில் மூத்தவர் தோழர்.இராஜமாணிக்கம் (வயது 59), திருவாரூர். | | | | | | |

# டிசம்பர் 25 கொடிய விடியாத இரவு

- சி. பரமேஸ்வரி

*1968*-ஆம் ஆண்டு டிசம்பர் *25* அன்று உலகம் முழுவதும் கிறிதுஸ்மஸ் தினம் கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்க கீழ் வெண்மணியில் மக்களுக்கோ அன்று இருண்ட நாளாக அமைந்தது.

விடுதலை, விடுதலை, விடுதலை
பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவ ரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை

என்று முழக்கமிட்டார் முண்டாசுக் கவிஞர் பாரதியார். அவரது முழக்கத்துக்கு காரணம் இந்தியாவில் அரசியல் சுதந்திரம் மட்டுமே கேள்விக்குறியாக இருக்கவில்லை. மாறாக பொருளாதாரக் சுரண்டலும் அதைவிட சாதியரீதியான சுரண்டலும் மித மிஞ்சி இருந்தது. அதன் அடையாளம் தான் கீழ் வெண்மணி படுகொலை. தமிழகத்தில் ஒருபடி நெல் உயர்வு, கடைசி உயர்வு கேட்டு போராடிய தொழிலாளர்கள் உயிருடன் தீயில் கொளுத்தப்பட்டு கொல்லப்பட்ட தியாகிகளில் நினைவு தினம் தான் டிசம்பர் 25-ஆம் நாள் நாகை மாவட்டத்தில் அமைந்துள்ள கீழ் வெண்மணி (தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமான பழைய தஞ்சை மாவட்டத்தில் முன்னர்இருந்தது) தமிழகத்தின் 30ரூ விளை நிலங்களை தன்னகத்தே கொண்டு அமோக விளைச்சல் தரும் பூமி இப்பூமியில் எங்கு பார்த்தாலும் பச்சை பசேலேன, பசுமை நிறைந்த நெற்பயிர்கள், சில்லேன்று வீசும் காற்று தென்னந்தோப்பு, கரும்புத் தோட்டங்கள், என மனதை கொள்ளை கொள்ளும் இயற்கை வளங்கள் இங்குதான் பல தரப்பட்ட மக்கள் கூலித் தொழிலாளர்களாக வேலை செய்து வந்தனர். பெரிய நிலப்பரப்புக்கள், பண்ணையர்கள் ஆதிக்கம் வேரூன்றி மரமாக வளர்த் தொடங்கியிருந்த காலம் மண்ணையர்களிடம் அதிகப் பணமும், நிலமும் இருந்தது. பண்ணையர்களிடம் வேலை செய்த கூலி தொழிலாளர்களை அடிமைகளாக நடத்தினார்கள் குறைந்த கூலிக்கு அதிக வேலை வாங்கினார்கள் கோழி கூப்பிடும் நேரத்திற்கு வேலைக்கு சென்று இரவு கொசுக்கடி ஆரம்பித்த பிறகு தான் வீடு திரும்ப வேண்டும். இந்த வேலைக்கு தினக் கூலி, சின்னப் படி நெல் ஒரு அணா காசு, மதியம் சோறு போட்டால் அதற்காகக் கூலியில் ஒரு சின்னப்படிநெல் பிடிக்கப்படும், சோறு சாப்பிட்டால் அதை அவன் இலைப்போட்டு சாப்பிடக் கூடாது. பித்தைளைப் பாத்திரத்தில் சாப்பிடக் கூடாது. பழையக் காலத்தில் சிறை கைதிகளுக்கு தருவது போல் மண்ணாலான மல்லைச்சட்டியில் தான் சாப்பிட வேண்டும். குடும்பத்தில் உள்ள அனைவரும் மிராசுதாரர் வீட்டில் வேலை செய்ய வேண்டும். கூலியும் பணமாக கொடுக்க மாட்டார்கள் ஒரு நெல்லும் கேப்பை கூழு தான் சம்பளமாக கொடுத்தார்கள்.

பண்ணை அடிமைகளாக இருந்தவர்களில் வெரும் பகுதியினர் ஜாதியில் தாழ்த்தப்பட்டவர்கள். கணவன் மனைவி தகராறுக்கு கூட ஒருவர் சிறுநீரை மற்றவரைக் குடிக்க செய்வது. கணவனை கட்டி வைத்து அடித்தாலும், மனைவியோ பிள்ளைகளோ எதிரில் நின்றாலும் அடிக்கிறார்களே என்று வாய்விட்டு அழக்கூடாது வாயிருந்தும் ஊமைகளால் இருக்க வேண்டும். அதே போல் பண்ணையாள் மனைவியையோ, பிள்ளைகளையோ அடித்தாலும் அவன் கண் இருந்தும் குருடனாகவே இருக்க வேண்டும். அடிக்கும் போது வலி தாங்காது ஐயோ என்று கத்தக் கூடாது. ஐயா என்று தான் கத்த வேண்டும். இது கதையல்ல அன்று சமூக நியதியாக இருந்தவை இது. பண்ணையரை எதிர்த்தால் குடிக்கும் தண்ணீர் கிணத்தில் மலத்தை அள்ளி போடுவது எதிர்த்தவரை

மரத்தில் கட்டி வைத்து உடம்பில் வெல்லத்தை கரைத்து ஊற்றி எறும்பை கடிக்கச் செய்து கட்டைவிரலை வெட்டினார்கள். இவ்வாறு 1950-ல் தஞ்சை தரணியில் கடுமையான தண்டனைகள் நிறை வேறியது. இதனால் விவசாய தொழிலாளர்சள் அனைவரும் ஒன்று கூடி சங்கமாக திரண்டு தங்களுக்குக் கிடைக்கும் கூலியில் அரைப்படி நெல் உயர்த்திதர வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற முத்ததரப்பு மாநாட்டில் கூலி உயர்வு கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது இதை ஏற்றுக்கொள்ள மடியாத நில பிரபுக்கள் தொழிலாளர்களை தாக்குவது என்ற முடிவுக்கு வந்தார்கள்.

19.09.1968 மத்திய, மாநில அரசு ஊழியர்கள் குறைந்தபட்ச சம்பளம் கேட்டு நடத்திய போராட்டத்திற்கு ஆதரவாக தஞ்சையில் விவசாயத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அதில் கீழ்வெண்மணி தொழிலாளர்களும் பங்கெடுத்துக்கொண்டார்கள். இது அங்கு நிலவிய அரசியல் உணர்வையும் உறுதியையும் உணர்த்தியது. பண்ணையார்கள் இந்த அரசியல் உறுதிபாட்டை ஒடுக்க நினைத்தார்கள். இப்போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக அபராதம் ரூ.250 விதித்தார்கள். அதோடு விடாமல் கூலி உயர்வு, போராட்டத்தில் கலந்துகொண்டு தொழிலாளர்களை ஒடுக்க டிசம்பர் 25ஆம் தேதி இரவு காவல்துறையும், கோபாலகிருஷ்ணநாயுடு தலைமையில் சென்ற ரௌடிகளும் கீழ்வெண்மணி கிராமத்தை சூழ்ந்து தாக்கினார்கள். தாக்குதலில் இருந்து தப்பிச்சு ராமய்யாவின் குடிசைக்குள் 48பேர் மறைந்து கொண்டார்கள். ஆனால் கொடுங்கோல் எண்ணம்கொண்ட மிராசுதார்கள் மனம் இறங்கவில்லை. அந்தக் குடிசைக்கதவை வெளியில் தாழ்போட்டு குடிசைக்கு தீவைத்தார்கள். தீயின் வெப்பம் தாங்காமல் ஐயோ.. ஆ.. ஆ.. அம்மா.. என்று அலறினார்கள். வெப்பம் தாங்க முடியாமல் 6பேர் வெளியில் ஓடினார்கள். 2 பேரை மீண்டும் பிடித்து நெருப்புக்குள் வீசினார்கள். ஒருதாய் தன்னுடைய ஒருவயது குழந்தையை நெருப்பில் இருந்து காப்பாற்றுவதற்காக வெளியே வீசினார்கள். பச்சிளம் குழந்தை என்று கூட பாராமல் அதை மீண்டும் இரும்பு நெஞ்சம் படைத்தவர்கள் மீண்டும் நெருப்பில் தூக்கி எறிந்தார்கள். ஒருதாய் தன் ஒருவயது குழந்தையை கொடுந் தீயில் இருந்து பாதுகாப்பது போன்று எண்ணி கட்டி அணைத்து எறிந்து போனார். அரைப்படி நெல், கூலி உயர்வு கேட்ட காரணத்துக்காக மிராசுதாரர்கள் அளித்த பரிசு தமிழகத்தை உலுக்கிய கொடுமையான இரத்த சரித்திரம் ஆகும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு நடந்த நெஞ்சை உலுக்கிய கொலை வெறியாட்டங்களில் தமிழ்நாட்டில் 1968 ஆம் ஆண்டு டிசம்பர் 25ம் தேதி கீழ்வெண்மணியில் நிகழ்ந்த படுகொலை. எளிதில் மறக்க முடியாத சம்பவமாகும். சாதிய மேலாதிக்கமும் நிலவுடைமையாளர்களின் ஆதிக்கமும் ஒன்றிணைந்து நடத்திய இந்த படுகொலையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த 44 விவசாய கூலித் தொழிலாளர்கள் ஆண், பெண், குழந்தைகள் என வித்தியாசமின்றி கல்நெஞ்சக்காரரர்கள் பூட்டிய வீட்டினுல் வைத்து எரித்துக் கொல்லப்பட்டது உலகெங்கும் கொண்டாடப்படும் கிறிஸ்துமஸ் திருநாளை மக்கள் அனைவரும் மிக சந்தோசத்துடன் கொண்டாடிக்கொண்டிருக்க கீழ்வெண்மணியில் தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு மட்டும் கொடிய இரவாகவும் விடியாத இரவாகவும் அமைந்தது.

ஆறாத ரணமாய்..
மாறாத வடுவாய்..
மீளாத துயராமாய்..
இன்னும் கனன்று
கொண்டிருக்கிறது
வெண்மணியின்
செந்தீ!
ஒடுக்கப்பட்டோரின்
உரிமைகள்
உறுதிபடும்வரை
வர்க்கபேத
கொடுமைகள்
மடியும்வரை
எரிந்து
கொண்டேயிருக்கும்
இத்தீ!

●

மாநாட்டு நிறைவுரை


# பணியாளர் தேர்வாணையத்தைக் கலைப்பது ஆபத்தானது

- ஸ்ரீகுமார்

சென்னை, டிச. 20 மாநில அரசுப்பணிகளுக்கு ஆட்களைத் தேர்வு செய்யக்கூடிய பணியாளர் தேர்வாணையத்தை பல்வேறு மாநில அரசுகள் கலைத்து வருவது ஆபத்தானது என்றும் இத னால் நிரந்தரமற்ற ஊழியர் முறை உருவாக்கப்படுவதாகவும் அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளன தலைவர் ஸ்ரீகுமார் கூறினார். சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14வது மாநில மாநாட்டை வாழ்த்தி அவர் பேசியது வருமாறு: 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்பெருந்தொற்று காரணமாக நாடுமுழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் உணவகங்கள், கடைகள் என அனைத்து நிறுவனங்களும் மூடப் பட்டன. தனியார் மருத்துவமனை களும் மூடப்பட்டன. ஆனால் அரசு அலுவலங்களை மூடமுடியுமா? முடியாது. அவை செயல்பட்டன.

பெருந்தொற்று காலத்தில்தான் ஆந்திராவிலும் உத்தரப்பிர தேசத்திலும் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதில் தேர்தல் பணியாற்றிய பல அரசு ஊழியர் கள் பெருந்தொற்றால் உயிரிழந்தனர். தமிழகத்திலும் பொதுச் சுகாதாரத் துறை, பொதுவிநியோகம், போக்கு வரத்து என பல துறைகளில் பணி யாற்றிய அரசு ஊழியர்கள் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தனர்.

பெருந்தொற்றை கண்டு தனியார் நிறுவனங்கள் அஞ்சிய போது உயிரைப் பொருட் படுத்தாமல் பணியாற்றியவர்கள் அரசு ஊழியர்கள் தான். பழைய பென்சன் திட்டத்தின்படி அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதை ஒன்றிய, மாநில அரசு கள் கைவிட்டுவிட்டு ஊழியர் பங்கேற்பு டன் கூடிய என்பிஎஸ் என்று அழைக்கப் படக்கூடிய தேசிய ஓய்வூதிய திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தி வருகின்றன. தேசிய ஓய்வூதிய திட்டம் என்றும் அழைக்கப்படும் என்.பி.எஸ் ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தால் (பி.எஃப்.ஆர். டி.ஏ) கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தில் 7லட்சம் கோடி ரூபாய் டெபாசிட் உள்ளது. இந்த பணத்தைக் கைப்பற்றுவதில் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு பெரு நிறுவனங்கள் இடையே போட்டி நிலவுகிறது. இதற்கு ஆதரவாக மோடி அரசு செயல்படுகிறது. இந்தத்திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துமாறு தொழிற்சங்கங்கள் கோருகின்றன. பிப்ரவரி மாதம் நடைபெறவுள்ள நாடு தழுவிய இரண்டு நாள் பொது வேலை நிறுத்தப் போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். பல மாநில அரசுகள் அரசு வேலைக்கு ஆட்கள் எடுப்பதை அவுட் சோர்சிங் விட்டுவிட்டன. தென்மாநிலங்களில் தமிழ்நாடு, கேரளா மாநில அரசுகள் மட்டுமே அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக ஆட்களைத் தேர்ந்தெடுக் கின்றன. ஆனால் நாட்டின் பிறபகுதி களில் ஒன்றிய, மாநில அரசுகளுக்கு ஆட்களை எடுக்க அவுட் சோர்சிங் முறை பின்பற்றப்படுகிறது. ஜம்மு காஷ்மீரில் முன்பு இருந்து மெஹ்பூபா முப்தி தலைமையிலான அரசு இதற்காகவே அவுட் சோர்சிங் கார்ப்ரேஷனை ஏற்படுத்தியது. இது ஹரியானா, உத்தரப்பிரதேசம் மாநிலங்களிலும் வந்துவிட்டது



தற்போது தமிழகத்திலும் அது தொடங் கப்படவுள்ளதாகத் தெரிகிறது. இது ஆபத்தானது. நமது சங்க செயல்பாடுகளும் ஜனநாயக முறைப்படி இருக்கவேண்டும். ஒவ்வொரு ஊழியர்கள் சந்திக்கும் பிரச்சனைகளில் தலையிட்டு அவர்களுக்குத் தீர்வை பெற்றுத்தர வேண்டும். மேலும் நிரந்தர ஊழியர்கள் மட்டுமல்ல அனைத்துத் துறைகளிலும் பணியாற்றும் அவுட்சோர்சிங் மற்றும் ஒப்பந்த ஊழியர்களையும் அணிதிரட்டு வதோடு அவர்களது பிரச்சனை களிலும் தலையிடவேண்டும். அரசுப்பணிகள் மட்டுமல்ல மின்சார வாரியம் உள்பட பல்வேறு வாரியங்களையும் தனியார் மயமாக்குமாறு மாநில அரசுகளை ஒன்றிய அரசு நிர்பந்தப்படுத்தி வருகிறது. எனவே மோடி அரசின் மக்கள் விரோத புதிய தாராளமய பொருளாதார கொள்கைகளையும் எதிர்த்த போராட்டத்தையும் நாம் தீவிரப்படுத்தவேண்டும். எனவே பிப்ரவரி மாதம் மத்திய தொழிற்சங்கங்கள் 23, 24 தேதிகளில் நடத்தவுள்ள இரண்டு நாள் வேலை நிறுத்தத்தில் அரசு ஊழியர்களும் பெருமளவில் பங்கேற்கவேண்டும். இவ்வாறு ஸ்ரீகுமார் பேசினார். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com